

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 16

நாரா நாச்சியப்பன்

டி. கே. சீனிவாசன்

வழிப்போக்கன்

அறிஞர். கா. அப்பாத்துரை

நா. பாண்டுரங்கன்

தில்லை வில்லாளன்

ஞா. மாணிக்கவாசகன்

விசு. திருநாவுக்கரசு

க. குஞ்சிதம்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
புரட்டாசித் திங்கள் 9-ம் நாள்

விலை அணா 5
25—9—49

அணியணியாக வாரீர்!

திராவிடத் தோழர்காள்! திராவிடத் தோழர்காள்!
திராவிட முன்னேற்றக் கழகம் தன்னில்
பணிபல புரிய வாரீர்! வாரீர்!
அணியணி யாக வாரீர்! வாரீர்!

கொள்கை யொன்று கூறிப் பின்னதைத்
தள்ளி வைத்துத் தகாதென் போரை
எள்ளி ஏசிடும் குழுவின் நீங்கி,
கொள்கை பெரிதெனக் கொள்ளும் தோழர்காள்
உள்ள நிறைவோ டொருங்கு வாரீர்!
வெள்ளம் போலத் திரண்டு வாரீர்!

ஒருவர் வாழ்வுகண் டுவகை யடையாது
கருவிடும் போக்கினர் குழுவின் நீங்கி
இந்நாட்டு மக்கள் யாவரும் நல்ல
முன்னேற்றங் காண முனையும் தோழர்காள்
அரும்பணி புரிய வாரீர்! வாரீர்!
அனைவரும் ஒன்ருய்த் திரண்டு வாரீர்!

அருமைத் திராவிடத் துரிமை பெறுதல்
பொரு ளாதார விடுதலை யடைதல்
சமுதாய வாழ்வில் மக்கள் அனைவரும
சமமெனும் நிலையை அமைத்தல் என்னும்
உயர்பணி புரிய வாரீர்! வாரீர்!
ஊரு ராகச் சேர்ந்து வாரீர்!

செறிந்த வைதீகத் தீமை யகற்றி
அறிவுப் புரட்சியும் ஆக்க வேலையும்
நெறிமுறை யாட்சியும் நிறையச் செய்ய
மறத்தோள் தட்டி மார்பகம் நிமிர்த்தி
நற்பணி புரிய வாரீர்! வாரீர்!
நாடு நாடாகக் கூடி வாரீர்!

— நாரா நாச்சியப்பன்



திராவிட முன்னேற்றக் கழகம்!

ஜூலை ஒன்பதன்று தலைவர் பொருந்தாத் திருமணம் புரிந்து கொண்டார். அதன் விளைவுதான் செப்டம்பர் பதினேழாம் நாள் புதுக்கட்சி துவக்கம்.

ஒரு திருமணம் இத்தகைய விளைவினை ஏற்படுத்தியுள்ள செய்தி உலகத்திற்கோர் புதுமை. எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக, நாட்டில் திருமணங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. திருமணத்தில் கலந்து கொண்ட மணமக்கள் எத்தனையோ கோடிப்பேர் இருக்கலாம். திருமண நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழாதவர் யாருமே இல்லையென்னலாம். ஒரு குடும்பத்தில் மணம் முடிகிறதென்றால் முடிந்த மறுகணம் முதல் மகிழ்ச்சி நிலவுவது இயற்கை. மணமகன் தனக்கு வந்துள்ள துணைவியின் எழிலை எண்ணிப்பூரிப்பான். மணமகளோ தனக்கு வாய்த்துள்ள துணைவனின் குன்றொத்த தோள்களைக் கண்டு உவகை கொள்வாள். மாமியார், மருமகள் வருகை தமக்குக் குடும்பப் பொறுப்பைக் குறைப்பதாகும் என்று களிப்பாள். தம்பியோ, அண்ணனுக்குத் துணைவி தனக்கு அண்ணி என்று கூறி மகிழ்வான். வீட்டுச் சிறு குழந்தையோ, தம்மைச் சீராட்டப் புது நபர் கிடைத்திருக்கும் மகிழ்ச்சியில் கும்மாளம் போடும். ஒரு திருமணமென்றால் இத்தகைய விளைவுகள் நிகழ்வது கண்கூடு.

ஆனால் 'தலைவரின் திருமணம்' மேற்குறிப்பிட்டதற்கு நேர் மாறான விளைவுகளைத் தந்ததை நாம் அறிவோம். "துக்கப்படாதார் யார், அத்துயர்ச் சேதி கேட்டு" என்ற நிலை நாடுமுற்றும் இருந்தது. மகிழ்ச்சி, மருந்துக்கும் ஏற்படவில்லை, யாருக்கும்.

மற்றொன்று. ஒரு திருமணம் நிகழ்வதானால் வீட்டுப் பணம் செலவழியும். நகைகள் காசுக்கடைக்குச் செல்லும். மணம் நிகழ்ந்த நான்கைந்து நாட்களுக்குப் பிறகு வரும் பால்காரனுக்கும், புடவைக் கடைக்காரனுக்கும், நகைக் கடைக்காரனுக்கும் பதில் சொல்லுவது பெரும்பாலான நடுத்தரக் குடும்பங்களில் சிரமமாயிருக்கும். ஆக, மண நிகழ்ச்சி குடும்பத்தில் மகிழ்ச்சியை விளைப்பதாயினும், செல்வ வளத்தைக் குறைக்குமென்பது மட்டும் பெரும்பாலும் உறுதி.

ஆனால் தலைவரின் திருமணம் இவ்விஷயத்திலும் நேர்மாறாகவே பயன் தந்திருக்கிறது. பணம் தக்க பாதுகாப்புடன் தங்கிவிட்டது. குடும்பத்திலிருந்த தோழர்களைத் தான் அவர் இழக்க நேரிட்டது. கழகத்தில் பெரும்பான்மையோர் பெரியார்

ரோடு மாறுபட்டு, பணிபுரியாது விலகி நின்றது அனைவரும் அறிந்ததொன்று.

ஆகவே, பணத்தை மீத்துத் தோழர்களை, தொண்டர் மாணிக்க ரத்தினங்களை இழக்கச் செய்தது, பெரியார் — மணியம்மை திருமணம்.

இத்தகைய புதுமைமிக்க விளைவுளைத் தந்துள்ள திருமணம் தான் "திராவிட முன்னேற்றக் கழக"த்தையும் நாட்டிற்கு நல்கியிருக்கிறது.

சென்னையில் 17—9—49 அன்று கூடிய மத்திய திராவிடக் கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் பெரியார் தலைமையில் நம்பிக்கையில்லை என்று முடிவு செய்ததோடு திராவிடர் கழகத்தைக் கைப்பற்றுவதைவிட, புது அமைப்பில் பணிபுரிவதே கண்ணியமான வழி என்ற முடிவுக்கு வந்தது. அம் முடிவின்படி "திராவிட முன்னேற்றக் கழகம்" தோழர் அண்ணாத்துரை அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது.

நாட்டிற்குக் கட்சியின் பெயர் புதிதுதான்! ஆனால் கொள்கைகள் புதியன அல்ல. அவை நாம் இதுவரை பரப்பியவையே ஆகும்.

> அரசியல் துறையில், திராவிட நாட்டில் வடநாட்டு அல்லது வேறு எந்த நாட்டு ஏகாதிபத்திய ஆட்சியும் இல்லாமல் செய்து தனியாட்சியுடைய நாடாக ஆக்குவது,
>
> பொருளாதாரத் துறையில், சமதர்ம நிலையை உண்டாக்குவது,
>
> சமுதாயத்துறையில் பேதமற்ற மனித சமுதாயத்தை அமைப்பது.

இம்மூன்று குறிக்கோள்களையும் முன்வைத்தே புதுக்கட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது.

கட்சியின் தொண்டர்கள், பிரசாரகர்கள் ஆகியோர், மூன்று மாதத்திற்கு முன்வரை 'திராவிடர் கழகம்' என்னும் அமைப்பிலே பணியாற்றியவர்கள் தாம்!

எனவே புதிய கட்சியின் தோற்றம், திராவிடர் கழகத் தலைவரின் பொருந்தாத் திருமணத்தாலும், அவர்தம் எதேச்சாதிகாரத்தாலும், அதிருப்தியடைந்து பணி புரியாது விலகி நின்ற எண்ணற்ற தோழர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்து புரிய வாய்ப்பளிக்கவே ஏற்பட்டதாகும்.

தலைவரோடு மாறுபட்டவர்கள் கழகத்தில் பெருந்தொகையினராக இருந்தும், கழகத்தைவிட்டு ஏன் அவர்கள் வெளியேற வேண்டுமென்ற கேள்வி எழுவது இயற்கை. மூன்றில் இரண்டு பங்கு நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் தலைவர் மீது நம்பிக்கையில்லை யென்று தெரிவித்த பிறகும், இருநூற்றுக்கு மேற்பட்ட கழகங்கள் நம்பிக்கையில்லையென்று தீர்மானித்த பின்னரும், பலலாயிரக்கணக்கான உறுப்பினர் கண்ணீர்த்துளிகளின் மூலம் தம் கண்டனத்தை வெளியிட்ட பிறகும், ஒரு தலைவர் 'தலைமைப் பதவி' பெரிதென்று விடாப்பிடியாய் இருப்பார் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் நம் 'தலைவர்' ஆடாது அசையாது வீற்றிருந்தார். தொண்டர்களுக்குள்ளே மோதுதலை வளர்த்துத் தமக்கு ஆள் சேர்த்துக் கொள்ளத்

தொடங்கினார். இத்தகைய நிலையில் தலைவரை நீக்குவது என்னும் பணியிலிறங்கினால், அதற்கான போராட்டமே பெரிதாக நிகழ்த்தவேண்டி யிருக்கும். காரணமற்று, நம்மோடு வேலை செய்து வந்த தோழர்களோடு, அவர்கள் 'ஆதரவாளர் களா' யிருக்கிறார்கள் என்பதற்காக வம்பு விளைக்க வேண்டி யிருக்கும். நாடு இன்றுள்ள நிலையில் இச் சூழ்நிலையை நாம் உண்டுபண்ண விரும்புவது நல்லெண்ணத்தின் பாற்பட்ட தாகாது.

மேலும் கழகத்தைக் கைப்பற்றுவது என்பது மட்டுமே நம் குறிக்கோள் அல்ல. தொடர்ந்து பணிபுரிய வேண்டுமென்பதற்காகவே கழகத்தை நாம் கைப்பற்ற எண்ணுகிறோம். தொடர்ந்து பணிபுரிவதே நம் உண்மையான நோக்கமாயிருக்குமானால், அந்நோக்கம் நிறைவேறப் புது அமைப்பே போதுமானது. ஆகவே தான் சென்னையில் கூடிய கமிட்டிக் கூட்டம் இத்தகைய'தொரு நல்லமுடிவுக்கு வந்தது.

அக்டோபர் 16-ம் தேதிக்குள் நாடெங்கும் திராவிடர் முன்னேற்றக் கழகங்கள் அமைக்கப்பட்டாக வேண்டும். பட்டி தொட்டி, நாடு நகரங்களிளெல்லாம் முன்னேற்றக் கழகத்தின் முழக்கம் எழச் செய்யவேண்டும. இந்த நற்பணியைக் கழக ஊழியர்கள் குறைவற ஓரிரு மாதங்களில் செய்து முடிப்பர் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

அமைப்பு வேலை முடிந்த பிறகு கழகப் பணி தொடங்கும்! 'மறுத்துக் கேட்பார் யாருமஇல்லை. எங்களை விட்டால் மறு பேரும் இல்லை' என்ற இறுமாப்பில் ஆட்சி நடத்துவோர், தங்கள் போக்கினை மாற்றிக்கொள்ளும் வகையில் கழகப்பணி நிகழும் என்று உறுதி கூறுகிறோம். கொக்கரிக்கும் வைதீகத்திற்கு முன்னேற்றக் கழகத்தின் அறிவுப்படை சவக்குழிக்கு வழி காட்டுமென்பதும் திண்ணம். பலமான மத்திய சர்க்கார், 'பாரத்' என்ற திருப்பெயர், அரசாங்க மொழி இந்தி இத்தனை விருதுகளோடு ஆட்சி நடத்தும் வடவர் ஏகாதிபத்தியம் தன் ஆதிக்கத்தைக் கைநெகிழ விடும்வரை, முன்னேற்றக் கழகத்திற்கு ஓய்விருக்காது என்பதும் உறுதி உறுதி என்போம்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டு மக்களின் முற்போக்கில் நாட்டங் கொண்டு பணிபுரியும்; எனவே நாட்டு மக்கள் கழகத்தின் வளர்ச்சிக்குத் தம்மாலான ஆதரவை நல்குவரென்பதுமுறுதி.

கழகம் தேன் கூடென்போம்; நாட்டு மக்கள் வண்டாவர், அப்போது. கழகம் பொழியும் மழை என்போம்; நாட்டு மக்கள் நற்பயிராவர், அப்போது. கழகம் ஒளிச்சிறப்புமிக்க ஞாயிறு என்போம்; நாட்டு மக்கள் ஒளியை மேவும் மலர்க் குவியல் ஆவர், அப்போது.

தேனை மறந்திருக்கும் வண்டும் — ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் — இந்த
வைய முழுதுமில்லை தோழி

என்ற பாரதியின் சுவைமொழியை நினைப்பூட்டுவதோடு, 'திராவிடர் முன்னேற்றக் கழகம் வெல்க!' என்று வாழ்த்துகிறோம்.

புதுக்கட்சி அமைப்பதே நன்று!

○ ● ○

தளபதி அண்ணாத்துரை விளக்கம்

[கடந்த 17—9—49 சனிக்கிழமை யன்று சென்னையில் நிகழ்ந்த திராவிடர் கழக மத்திய நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி ஆலோசிக்கு முகத்தான் "திராவிடர் முன்னேற்றக் கழகம்" என்ற புது அமைப்பில் பணியைத் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுக்கு வந்தது. அக் கூட்டத்தில் தளபதி அண்ணாத்துரை சமர்ப்பித்த அறிக்கை 'புதிய அமைப்பு ஏன்?' என்று தக்க காரணங்களோடு விளக்கம்தருவதாக அமைந்திருக்கிறது. நாடெங்கும் திராவிட முன்னேற்றக் கழகங்கள் இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் தோற்றம் பெறுகின்றன.]

திராவிடர் கழக உறுப்பினர்களான நாம் இதுவரையில், ஆற்றிவந்த பணியினை, சில நாட்களாகத் தொடர்ந்து ஆற்ற முடியாத நிலைமையில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறோம். இதற்கான காரணம், அனைவரும் நன்கு அறிந்ததேயாகும்.

கழகத்திலே ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாக, நாம் எப்போதும் போல் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது.

இந்தக் குழப்பம், பெரியார் செய்துகொண்ட திருமணத்தின் விளைவு. நாமும், இன்று இங்கு வராமலிருக்கும், பல ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும், பெரியாரின் திருமண ஏற்பாட்டைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனோம். இதயத் துடிப்புடன், அவரை வேண்டிக் கொண்டோம். பலன் இல்லை. திருமணம் நடந்தேறி விட்டது. மணவினை செய்து கொண்டதற்கான விளக்கம் கூறும் வகையிலும், எதிர்ப்புகளுக்கு மறுப்புகள் தரும் வகையிலும், பெரியார், கழகத்தை ஏதேச்சாதிகாரக் கூடமாகவும், உறுப்பினர்களை அடிமைகளாகவும் ஆக்கும் போக்கையே விரும்புவதைத் தெளிவு படுத்திவிட்டார். நாம் அவருடைய தலைமையில் நம்பிக்கை இழந்தவர்களாகி விட்டோம்.

கழகத்தின் பெரும்பான்மையினர் பெரியாரின் போக்கைக் கண்டித்தும், அவருடைய தலைமையில் கழகப் பணியாற்ற முடியாது என்று தீர்மானித்தும் கருத்துரை வெளியிட்டனர். கழகத்திலே, பெரும்பாலோர், தம்மிடம் நம்பிக்கை யிழந்துவிட்டனர் என்பது அறிந்து பெரியார் தாமாக, தலைமைப் பதவியை விட்டு, விலகி, கழகப்பணி தொடர்ந்து நடைபெற வழி செய்வார், என்று எதிர்பார்த்து, கழகத் தோழர்களின் கருத்துரையைத் திரட்டி, அவரும், நாடும் அறியச்செய்தோம். அவரோ, பதவியைவிட்டு விலகுவதாக இல்லை.

கழகத் தோழர்கள் கருத்து

பெரியாரின் போக்கினைக் கண்டித்தும், அவர் தலைமை

யினை ஏற்க மறுத்தும், கருத்துரை வழங்கியுள்ளவர்களின் தொகையும் ஏராளம். அவர்களின் தகுதி திறமையும், சிலாக்கியமானது. கழகக் கொள்கைகளை நாட்டுக்கு எடுத்துப் பிரசாரம் செய்து வந்த, பேச்சாளர், எழுத்தாளர் ஆகியோரில், பெரியாரின் காரியாலயத் தொடர்பு கொண்ட சிலர் தவிர மிகப் பெரும்பாலோர், பெரியாரின் தலைமையை ஏற்க மறுத்துவிட்டனர். பல நகரங்களிலே திராவிடர் கிளைக் கழகங்களின் பொறுப்பாளர்களாக இருந்து வந்தவர்கள், பெரியாருடைய தலைமையை ஏற்க மறுத்துவிட்டனர். பெரியாரின் ஆதரவைப் பெற்றே அமைக்கப்பட்ட மத்ய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களில், மூன்றில் இரண்டு பகுதியினர், பெரியாரின் போக்கைக் கண்டித்து இருப்பதுடன், அவருடைய தலைமை இனிக்கூடாது என்று தெளிவாகக் கூறிவிட்டனர். இதைவிட விளக்கமாக ஒரு தலைவருக்கு அவருடைய தலைமையின் கீழுள்ள கழகம், நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்ததுடன் அவருடைய தலைமையில் கழகம் இருக்கும் வரையில், கழகப் பணியில் கலந்துகொள்ள முடியாது என்று தெரிவித்ததுடன், செயலிலே செய்து காட்டியுமுள்ளனர். கழகத்தின் வரலாற்றிலும் சரி, பெரியாரின் வாழ்க்கை வரலாற்றிலும சரி, இவ்வளவு வெற்றிகரமான 'ஒத்துழையாமை' நடைபெற்றதில்லை. பெரியார் தமக்குக் கிடைத்த சில ஆதரவாளர்களைக் கொண்டு, கழகத்தை நடத்திச் செல்ல எடுத்துக் கொண்ட முயற்சி அவருக்கே கூட மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் வெற்றி பெறவில்லை.

இந்தச் செயலற்ற நிலைமையை, நாம் உண்டாக்க எண்ணினாலும், இதனால் நாம் வெற்றிக் களிப்படையவில்லை. வேதனையே கொள்கிறோம் — ஏனெனில், பெரியாரின் போக்கைக் கழகத்தின் முன்னணியினர் வெறுக்கிறார்கள் என்பதை விளக்கிவிட்டபோதிலும், நாட்டிலே, நாமாற்ற வேண்டிய நல்லறிவுப் பிரசாரப் பணியை நிறுத்தி வைக்க நேரிட்டது, வேதனை தரும் சம்பவமாகவே நமக்குத் தோன்றுகிறது. இந்த நிலையை நாட்டிலே இன்றுள்ள, சூழ்நிலையில் மக்களின் அறிவுத்துறை, அரசியல் சமுதாய பொருளாதாரத் துறைகள் ஆகியவற்றிலே, பிற்போக்காளர்கள் படை எடுக்க, பயன் பட்டுவிடும் என்ற கவலை கொள்ள வேண்டியவர்களாகிறோம்.

திராவிடர் கழகத்திலேயிருந்து நாம் பணியாற்றுவதன் நோக்கம், நாட்டிலே அறிவுப் புரட்சி உண்டாக்கி, வைதீக ஆதிக்கத்தை அகற்றி நல்லாட்சி அமையவும், வடநாட்டு ஏகாதிபத்தியம் கிளம்பி, திராவிடத்தைத் தேயவைக்காமல் தடுக்கவுமேயாகும்.

மற்றப் பல அரசியல் கட்சிகள் போல, உடனடியான அரசியல் நோக்கம் கொண்டதல்ல நமது பணி.

நமக்கு, திராவிடச் சமுதாயம், ஜாதித் தளைகளை நீக்கி மதப் பிடிப்புகளை அகற்றி, பொருளாதாரத்துறையில் சமதர்ம நாடாகவும், அரசியல் துறையில் எந்த அன்னியநாட்

டுக்கும் அடிமைப்படாமலும் தனி உரிமையுடன் விளங்க வேண்டும் என்பதே குறிக்கோள். இதற்கான பிரசார அமைப்பாகவே திராவிடர் கழகத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறோம். இப்போது தலைவரின் போக்கினால், பணிபுரியாதிருக்கும் நிலைமை உண்டானதால், மேலேகுறிப்பிட்ட குறிக்கோள் வெற்றிக்கான காரியத்தைச் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகிறோம்.

இதுநமக்குத்திருப்திதரக்கூடியதுமல்ல, நாட்டுக்கு நன்மை பயப்பதுமாகாது. நமது பணி தொடர்ந்து நடந்தாகவேண்டும் என்பதுமட்டுமல்ல, தீவிரமாகவும் நடந்தாக வேண்டும் என்பதையே, நாட்டின் நானாவிதமான நடவடிக்கைகளும், நாடாள்வோரின் செயல்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. தலைவருக்கும் கழகத் தோழர்களிலே பெரும்பான்மையினருக்கும் தொடர்பு அறுந்து போயிருக்கும் சூழ்நிலை, நீடிக்குமானால், நாட்டிலே பழமையும் பாசிசமும் கொக்கரித்துக் கொண்டு கிளம்பும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அரசியல் துறையிலே பாசிசம் உருவாகிக்கொண்டு வருகிறது, அறிவுத் துறையிலே பழமை தான் இழந்த இடத்தை மீண்டும் பிடித்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தப் பல வழிகளாலும் முயற்சிசெய்கிறது.

ஒருபுறம் தலைவரின்போக்கு நம்மை 'ஒத்துழையாமை'ப் பாதைக்குத் துரத்துகிறது. மறுபுறமோ, பாசிசமும் பழமையும், இதோ நாங்கள் கிளம்பிவிட்டோம், என்ன செய்ய முடியும் உங்களால், என்று அறை கூவி அழைக்கிறது. இடையே, நாம் நிற்கிறோம். குறிக்கோளை மறக்காமல், கொள்கையில் வழுவாமல் பணியாற்றும் பண்பை இழக்காமல், இந்தச் சிக்கலான நிலைமையிலிருந்து, ஒரு தெளிவான பாதை வகுத்துக்கொள்ளவே இன்று கூடியிருக்கிறோம். திராவிட கழக அமைப்பை பயன்படுத்தி, நாம் நாட்டிலே ஆற்றிவந்த நல்லறிவுப் பிரசாரப் பணியை விட்டுவிடக் கூடாது-விடவும் போவதில்லை -பாசிசத்தின் பயங்கர உருவமும் பழமையின்கோரநர்த்தனமும்,நம்மை, மேலும் திறம்பட இன்னும் சற்று முறையுடன், பணிபுரியவே தூண்டுகின்றன. அந்த ஆர்வத்தினாலும் பொறுப்புணர்ச்சியாலும், நாம் பணிபுரியக் கிளம்புவது என்றால், திராவிடக் கழகத் தலைமையில் பெரியார் இருப்பது குறுக்கே நிற்கிறது; அவருடைய எதேச்சாதிகாரத்திற்கு இனி நாம் இரையாக முடியாது என்ற தீர்மானம் நமது நிலைமையைப் பாதிக்கிறது. இலட்சியத்தை இழக்கவும்முடியாது -எதேச்சாதிகாரத்திற்குப்பலியாகவும் கூடாது.

பாசிசத்தையும் பழமையையும் நாட்டிலே படையெடுக்க விடக்கூடாது-அதுபோல் கழகத்திலே பாசிசத்தை வளர்த்துள்ள தலைமையிலே இனியும் இருந்து பணியாற்றவும் கூடாது.

நாட்டைப் பாழ்படுத்தும் சக்திகளை எதிர்த்துப் போராடும் செயலையும் மறக்கக் கூடாது. அதுபோலவே, ஜனநாயகத்தை, தன்மானத்தை

அழிக்கும் போக்கினை மேம் கொண்டும் விட்ட தலைவரிடமும் இனிக்கூடிப் பணியாற்றுவதென்பது முடியாத காரியம், ஆகாதசெயல், தீதானதிட்டம்.

எனவே இனி நாம் நாட்டுக்குத் தேவையானவை என்று எந்தெந்தக் கொள்கைகளை இலட்சியத்தைப் பிரச்சாரம் புரிந்துவந்திருக்கிறோமோ அதுபோலவே செய்து வர வழி கண்டாக வேண்டும், அதற்கே இன்று இங்குக்கூடியிருக்கிறோம்.

நாட்டிலே பாசிசமும் பழமையும் பரவாதபடி எதிர்த்துப் போராட வேண்டிய பொறுப்புணர்ச்சியைக் கருதிக் கழகம் பாசிசத்தில் வீழ்வதோ, கழகப் பாசிசத்தை எதிர்த்துப் போராடவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக நாட்டிலே பாசிசமும் பழமையும் வெட்டிக்கொண்டு வரும் பயங்கரப் படுகுழியில் மக்கள் வீழ்வதற்கு உடந்தையாக இருப்பதோ, இரண்டுமே தீதான செயல். பொறுப்பற்ற காரியமாகும்.

ஒருபக்கம சாய்ந்து, இன்னொரு பக்கத்தைக் கெடவிடுவது சரியாகாது.

பெரியாரிடம் போராடிக் கொண்டிருக்கும் போக்கிலே நம்மைத் துரத்திவிட்டு, பாசிசமும் பழமையும் தங்கள் ஆதிக்கத்தைப புகுத்த முயற்சிக்கக் கூடும். அதுபோலவே, பாசிசமும், பழமையும் மிரட்டுவதைக் காட்டி, அறப்போருக்கு அழைப்பனுபபிப் பழயபடி தமது பாசிசப் பாசறையில் நம்மைப் பெரியார் பலியிடவும் எண்ணக்கூடும்.

இந்த இரு நிலைமைகளையும் தெளிவாகப் புரிந்துகொண்ட பிறகே, நாம், ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

நமக்கும் தலைவரின் கீழுள்ள கழகத்துக்கும் உள்ள தொடர்பு, என்னவிதமானது என்பது ஒரு பிரச்சினை. நமக்கும் நாட்டை நாசமாக்கும் பாசிசம பழமை ஆகியவைகளின் தாண்டவமாடும் நிலைமைக்கும், என்னவகையான தொடர்பு இருக்க வேண்டும் என்பது மற்றோர் பிரச்சினை. இந்த இரு பிரச்சினைகளையும் ஒருசேரக் கவனித்தே முடிவு காண வேண்டும். கழகத் தோழர்களிலே பெரும்பாலானவர்களும், நிர்வாக உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினரும், தலைவரிடம் நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்தான பிறகு, கழகத்தைக் கைப்பற்றி, நாம் நமது பணியினைத் தொடர்ந்துநடத்துவதுதானே முறை என்று பலமான கருத்து, இருக்கிறது—ஆர்வம் மட்டுமல்ல, இதைச்சாதிப்பதற்கான ஆற்றலும் இருக்கத்தான் செய்கிறது ஒருவிதமான முன்னேற்பாடோ வசதியோ, இல்லாமலேயே துவக்கப்பட்ட "மாலை மணி" யின் நிலைமையே, இதற்குப் போதுமான சான்றாகும். மேலும் பல மாவட்டங்களிலிருந்து இயக்கப் பணியாற்றிவரும் முன்னணியினருடன் நான் கலந்து பேசியதிலே, இது மேலும் தெளிவாகிறது. கழகத்தைக் கைப்பற்றுவதும் புதிய தலைமையின் கீழ் நமது பணியை நடாத்துவதும், சாத்தியமான காரியமேயாகும். இதை நான், மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன்.

போதுமான வலிவும், தேவையான வசதியும், மறுக்க முடியாத நியாயமும் நம்மிடம் இருக்கிறது எனினும் நான், இவ்வழி செல்வது, நாட்டிலே நாச நர்த்தனம் செய்யவும், பாசிசத்துக்கும் பழைமைக்கும் நம்மையும் அறியாமல் நாமாகவே இடந்தேடிக் கொடுத்தவர்களாவோம், என்று அஞ்சுகிறேன்.

நாட்டின் நிலைமையை நீங்கள் நன்கு அறிவீர்கள். வடநாடு—தென்னாடு எனும் பேத உணர்ச்சி டில்லியில் பேசப்பட வேண்டிய அளவுக்கு வளர்ந்து விட்டது. மொழி ஏகாதிபத்தியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மாகாண ஆட்சி மன்றங்கள், டில்லியின் சூத்திரக் கயிற்றிலாடும் பதுமைகளாக்கப்பட்டு விட்டன. தொழிலாளரின் பிரச்சினை, யாரும் ஒதுக்கிவிடமுடியாத வகையிலும் அளவிலும் வளர்ந்துவிட்டது. பொருளாதார நிலேயோ, பஞ்சமும், பட்டினியும், வேலையில்லாக் கொடுமையும் நாட்டிலே கிளம்பிக் கேடு விளைவிக்கும் விதத்தில், கெட்டு வருகிறது. பழமையோ, புதிய பட்டாபிஷேகத்துக்கான நாள் குறித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தான் நாம், கழகத்தைக் கைப்பற்றும் காரியத்தில் ஈடுபட வேண்டிநேரிடும். இது யாருக்கு இலாபமாக முடியும் என்பதைத்தான் தோழர்கள் மிக மிக ஜாக்கிரதையாகக் கவனித்துப் பார்க்கவேண்டும்.

கனிபறிக்க மரம் ஏறும் போது கருநாகம் காலைச்சுற்றிக் கொள்வது போல, பெரியாரிடமிருந்து, கழகத்தை மீட்கும் காரியத்தில் நாம் ஈடுபடும் சமயமாகப் பார்த்து, அதைச்சாதகமாக்கிக் கொண்டு பாசிசமும் பழமையும், மக்களைப் பிடித்தாட்ட முற்படக்கூடும் என்று அஞ்சுகிறேன். கழகத்தைக் கைப்பற்றுவது என்பதற்கு, யாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய எவரும் கட்டுப்படவேண்டிய முறைகள் உண்டு. தனி மகாநாடு கூட்டி, தலைவர்மீதும் நம்பிக்கையில்லை என்பதைத்தெரிவித்து, புதிய தலைவரைத்தேர்ந்தெடுப்பது தான் முறை. ஆனால், நாமறிந்துள்ள பெரியார், இந்த முறைக்குக் கட்டுப்படவோ, இதனை ஏற்கவோ, தயாரில் இல்லை. அவருடைய் தலைமை, அவருடைய பேனா முனையில் இருப்பதாகக் கருதி, கடைசிவரை கழகம் தம்மிடமே இருப்பதாகவும், மாறுபட்டவர்கள் கலகக்காரர்கள் என்றும், தலைமை தம்மதே என்றும், சாதிக்கவே, எண்ணுகிறார் என்பது அவருடைய பேச்சாலும் எழுத்தாலும் தெரிகிறது—அவருடைய சுபாவம் நமக்குத் தெரியும். எனவே, கழகத்தைக் கைப்பற்றுவது என்பதற்கு ஒரு கால அளவோ, ஒரு உருவமோ, ஏற்படாது. நாம் ஒரு புறம் திராவிடர் கழகம் என்ற லேபிளுடனும் அவர் மற்றோர் புறம் அதே லேபிளுடன் உலவுவதும், இருசாராருக்கும் இடையில், மோதவிட்டு வாழ

கண் திறக்குமா?

●

இத்தொடர் கதையின் இருபத்தாறும் அத்தியாயம் அடுத்த இதழில் வரும்.

விரும்பும் சந்தர்ப்பவாதிகள் ஆட்ட மாடுவதும், இந்தச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டுநான் முன்னால் குறிப்பிட்டபடி பாசிசமும், பழைமையும், நாட்டை நாசமாக்குவதுமான, காரியம்தான் நடைபெறும்.

கழகம், ஏற்கனவே அமைப்பும் ஒழுங்கும, கட்டுத்திட்டமும் உள்ளதாக இருந்திருப்பின் இந்த நிலை ஏற்பட வழி இருந்திருக்காது. கழகம் இப்போதுள்ள நிலையில் பெரியாரின் போக்குக்கு ஏற்ற வண்ணம் அசைந்து கொடுக்கும் தன்மையில்தான் இருக்கிறது.

இது மிகமிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்று நான் கருதுகிறேன். காலம் நிர்ணயிக்க முடியாது-தீர்ப்புப்பெறும் நிலையும் ஏற்பட முடியாது.

கைப்பற்றுவதற்கான நடவடிக்கையுடன், பகை உணர்ச்சி பட்டுப் போகாது - வளர்ந்த வண்ணம் இருக்கும்-ஏனெனில் முறைப்படி நாம் கழகத்தைக் கைப்பற்றினாலும், பெரியார் அந்த முறைக்குக் கட்டுப்படப் போவதில்லை. அவரைக் கட்டுப்படுத்தக் கூடிய விதமான சட்டதிட்டமும் கழகத்துக்கு இல்லை. எனவேதான், கழகத்தைக் கைப்பற்றுவதென்பது, தீராத போராகவே இருந்து வரும். இந்தச்சூழ்நிலையை பாசிசம மகிழ்ச்சியுடன் வரவேற்கும். கழகத்தைக் கைப்பற்றி, குறிக்கோளை வெற்றிகரமாக்கும், அறிவுப் பணி புரியலாம், நல்லாட்சி யமைய வழி கோலலாம் என்ற நமது ஆசை நிறைவேறுது-கழகம் யாருடையது என்ற முடிவு காண இயலாத வழக்கிலேயே மூழ்கிக் கிடக்க நேரிடும். பொது மக்களுக்கும், இந்த நிலைமை துவக்கத்திலே, உற்சாகம் மூட்டக் கூடுமானாலும், நாளாகவாக வெறுப்பையே உண்டாக்கும். ஆளவந்தார்கள், 'கழகத்திலே கலகம்' என்ற விதமாகவே பிரச்சினையைக் கவனித்து, அதையே சாக்காகக் கொண்டு அறிவுப் பிரச்சாரத்தை அடியோடு தடுத்துவிடத் திட்டமிட்டு வெற்றியும் பெறுவார்கள். கழகத்தைக் கைப்பற்றுவதிலே, நாம், எதிர்பார்க்கிற இந்தப் பல இன்னல்களைப் போக்கி வெற்றிபெற்ற பிறகுமகூட, அந்த வெற்றியினால் நாம் அடையும் பலன் என்ன என்று கவனிக்கும்போது, உருவான பலன் தெரியாது. அதற்குப் பிறகு நாம் உழைத்துத் தான் உருவான பலனைக்காண முடியும். பகை உணர்ச்சியைப் பலப்படுத்தி, திராவிடத்தைக் களமாக்கித் திராவிடர் கழகத் தோழர்களுக்கிடையே மோதலை மூட்டிவிட்டு நாம் காணும் வெற்றி, கடைசியில், ஒரு லேபிளாக இருக்குமேயன்றி, வேறு ஒன்றுமிராது. இதற்காகப்பாசிசத்திற்கு ஒரு வாய்ப்பளிப்பது சரியாகுமா, என்பதைத் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் மிகப் பலர் - அவர்கள் மிகச் சிலர் - என்பது அல்ல, நான் மறுப்பது, அந்தச் சிலருடன், போராடும் பலர், இறுதியில் காணப் போகும பலன் என்ன? என்பதும் அதற்காக, நேரத்தையும் நினைப்பையும், சக்தியையும் பாழ்படுத்துவது சரியா என்பதையும் தான் எண்ணிப் பார்க்கச் சொல்கிறேன்.

தக்க காரணங்களுடன், கொள்கையை அடிப்படையாகக்கொண்டும், கழகத்தைக் கைப்பற்றுவது என்று நாம் தெளிவுபடுத்தினாலும் அந்தப் பிரச்சினைகள், நாளா வட்டத்தில் பின்னணியில் தள்ளப்பட்டு, பெரியாரா? பிறரா? என்ற பேதப் பேச்சு முன்னணியில் கொண்டுவரப்பட்டு, கலகச் சூழ்நிலைதான் மூட்டிவிடப்படுமே தவிர பிரச்சினைக்கு, முடிவு காண முனையமாட்டார்கள். கொள்கையிலிருந்து வழுவினார், விரட்டிவிட்டோம்! எதேச்சாதிகாரம் செலுத்தினார் நீக்கிவிட்டோம்! என்ற எக்களிப்பும, மனத்திருபதியும்

பொது மேடை

○

இப் பகுதி அடுத்தஇதழிலிருந்து வரும். 'பொன்னி' தமிழ்மக்ளின் பத்திரிகை. தமிழ் மக்கள் 'பொன்னி'யைப்பற்றி என்னநினைக்கிறார்கள் என்று நாங்கள அறிந்துகொள்வது அவசியமல்லவா? அன்பர்கள் 'பொன்னி'யைப் பற்றிய தங்கள் கருத்துரையையோ, அல்லது உலக நடப்புப்பற்றிய தத்தம் எண்ணங்களையோ ஒரு காடுக்குள் எழுதி அனுப்பலாம். விளங்கச்சொல்ல வேண்டுமானால் வாசகர்களின் கருத்துக்களைத் தொகுத்துத் தரும் இடமாகப் 'பொதுமேடை' விளங்கும். சிறந்த கடிதத்திற்குப் பரிசளிக்கவும எண்ணியுள்ளோம்.

ஆசிரியர் 'பொன்னி'

கிடைக்குமே தவிர, கழகத்தைக் கைப்பற்றுவதனால் வேறு உருவான, நமது இலட்சியத்தை உருவாக்கக்கூடிய பொருளோ, சக்தியோ, பெற முடியாது—அது இல்லாத காரணத்தால். பொருள் இருக்கிறதே பல லட்சம், என்னலாம். இருக்கிறது! தக்க பாதுகாப்புடன். நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்குவது கழக வளர்ச்சியுமலல, கொள்கை பரப்பும் காரியமுமாகாது.

மேலும், அந்தப் பல இலட்சமும் கூட, அவர், 'பொதுவாக்கி' அவருடைய நம்பிக்கைக்கு வந்தவர்களின் மேற்பார்வையிலே டிரஸ்டு ஆக்குவதற்காக, நாட்டுக்கு, அறிவித்திருக்கிறார். கழகத்தைக் கைப்பற்றுவது என்ற முறை தோன்றினால், அதிலே மும்முரமாக ஈடுபட நேரிட்டுவிட்டதாகக் கூறி டிரஸ்டு, ஏற்பாட்டை ஒத்திபோட முனைவார் — கழகத்தைக் கைப்பற்றி விட்டோம என்ற நிலையை நாம் தெரிவித்தால், கழகமே கைவிட்டுப் போய்விட்டது, இனி எதற்கு டிரஸ்டு என்று கூறிவிடக் கூடும். அந்தப் பல இலட்சம் அவர் அறிவித்தபடி, பொது டிரஸ்டு ஆக்கப்படுவதற்கு வழி செய்துவைக்கும் வகையிலே பார்த்தால்கூட, கழகத்தைக் கைப்பற்றுவது என்ற முறையை நாம் மேற்கொள்ளக் கூடாது. லேபிள் உம்மிடமே இருக்கட்டும் - டிரஸ்டு எழுத வாரும் என்று நாம கூறவும், ஆமாம்! அவர்களும், கழகத்தை இவரிடமே இருக்கவிட்டார்கள், இனியும் என்ன தாமதம் 'டிரஸ்டு' எழுத என்று

நாடு கேட்கவும், ஒரு வழி செய்து தருவது, நல்லது என்று நான் கருதுகிறேன்.

கழகத்தின் லேபிள் அல்ல, முக்கியம் — கொள்கைகள், வேலைத் திட்டம், இவைகளே முக்கியம். ஒரு தனி நபர்கூட லேபிள் தம்மிடம் இருப்பதாக எப்போதும் கூறிக்கொண்டிருக்க முடியும் - ஆனால் கூட்டு முயற்சியில்லாமல் கொள்கை பரவாது, இலட்சியம் உருக்கொள்ளாது. அந்தக் கூட்டு முயற்சிக்கான வசதியும் வாய்ப்பும் வலிவும், நம்மிடம் இருக்கிறது · ஏராளமான அளவு — வளரக்கூடிய விதத்தில். கொள்கைகளைப் பரப்பி, இலட்சியத்தை வெற்றிகரமாக்க, நாம், தனித்திருந்து, அவருடைய தலைமையை மட்டுமல்ல, லேபிளையும் நீக்கிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயருடன் பணியாற்றி வருவதுதான் நல் வழி என்பது என் கருத்து. ஓடி விட்டார்கள்- பயந்து போனார்கள் — என்ற கேலிக் குரல் கிளப்ப முற்படுவர் சிலர். தூய்மை யடைந்து விட்டது கழகம், துரோகிகள் ஒழிந்து போயினர் என்று முழக்கமிடுவர் சிலர்.

கேலி, நாம் கேட்டறியாத தல்ல—நாம் அனைவரும் கூட்டாக ஒரே குடும்பமாக இருந்த போது கழகத்தை, மாற்றுக் கட்சியினர் செய்துவந்த கேலியைத் தாங்கித் தாண்டித்தான் இந்த அளவுக்கு வளர்ந்து வந்திருக்கிறோம். கேலி கேடு செய்யாது—பகை, நாட்டையே கெடுக்கும் — அதிலும் பகை, பலன் தராது—முடிவு காண முடியாதது—எதிர்ப்புச் சக்திகளுக்கும், பாசிசத்துக்கும் பழமைக்கும் இடமளிக்கக் கூடியதாகும். எனவேதான், ஆற்றல் இருந்தும் அடக்கம் வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் — கோழை என்று கேலி செய்யப்படுவதானாலும் சரி, வெறியன் என்ற சொல்லுக்கு இலக்காகக் கூடாது என்று எண்ணுகிறேன்.

இதனை முன்கூட்டியே கூறியிருக்கலாமே என்று எண்ணுவர் சிலர். பெரியாரின் போக்கைக் கண்டிக்கவும், ஜனநாயக உரிமை உணர்ச்சியைப் போற்றவும், அவருடைய அறிக்கைகள் மறுப்புகள்; கண்டனங்கள் ஆகிய பலவற்றுக்குப் பிறகும் உறுதியுடன நிற்கக்கூடியவர்கள் எவ்வளவு பேர் என்பதை கண்டறியவே, இவ்வளவு காலம் பிடித்தது -இதிலே பெருமையும பூரிப்பும் அடையக் கூடிய அளவுக்கு நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. நமக்குள்ள, ஆதரவின் அளவையோ, தரத்தையோ, குறைத்து மதிப்பிட்டு, நான் இந்த முடிவுக்கு வருகிறேன என்று எண்ண வேண்டாம— அந்த ஆதரவு பெரியாரின் தலைமையோ அவருடன் உள்ள லேபிளோ இல்லாமலே, நாட்டுக்குத் தேவையான நற்கருத்துக்களைப் பரப்பித் திராவிடச் சமுதாயத்தைச் சீராக்க உதவும், என்ற ஆசையாலும் நம்பிக்கையாலுமே இந்த முடிவை நான் உங்களுடைய கருத்துக்கு வைக்கிறேன்.

நாட்டின் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, நல்ல முடிவு செய்யும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ●

பாரதி விழா!

தமிழ்நாட்டின் தொழில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்களின் கோபால்பாக் மாளிகையில் நடைபெற்ற பாரதிவிழா, முன்னைப் பெரும் புலவனுக்கு இந்நாள் பெரும் புலவர் பலர் சேர்ந்தெடுத்த விழாவென்றே கூறுவோம்.

செப்டம்பர் 11-ம் நாளன்று காலை, புகைவண்டி நிலையத்திலிருந்து, தலைவர்கள் அண்ணாத்துரை ம. பொ. சிவஞானம், வ. ரா. முதலியோர் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள். பிற்பகல் 3-மணிக்குப் பேராசிரியர் வ. ரா. அவர்கள் தலைமையில்விழாத்தொடங்கியது. பாரதிக்கு நேர் வாரிசாக அங்கு வீற்றிருந்த பாரதிதாசன் அவர்களை நோக்கி, 'பாரதிதாசன் அவர்களே, பெரு மக்களே' என்று வ. ரா. புதுப் பாணியிலே தம் முன்னுரையைத் தொடங்கியமுறை குழுமியிருந்தோரின் உள்ளத்தில் மகிழ்ச்சி சேர்த்தது.

அடுத்து கவியரசர் பாரதிதாசனார் பேசத் தொடங்கினார். தாம் நேரிற் கண்ட பாரதியின் வாழ்க்கைச்செய்திகளை எல்லாம் சொன்னார். பாரதியார் சோற்றுக்கின்றிச் செத்தார் என்று சொல்லப்படுவது பொய்யென்றார். அவருடைய பாடல்களை இசைப்படுத்துவதாகக் கூறிச் சின்னாபின்னப்படுத்தும் இசையறிஞர்கள் என்று சொல்லிக்கொள்ளுவோரின் ஆற்றாமையை விளக்கினார். இன்னும் சாதி தொலையப் பாரதி பாடிய வரிகளையெல்லாம் சுட்டிக்காட்டினார். அச் செய்திகளெல்லாம் கேட்டு, பாரதியின் உண்மைக் குறிக்கோளை அறிந்துகொண்டது சபை. பிறகு, தங்கம்மாள் பாரதி, குழந்தையம்மாள், சி. எம். இராமச்சந்திரனார் முதலியோர் பேசியபின் அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் சொற்பெருக்காற்றினார். "பாரதியார் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் எனும் முத்துறையிலும் இந்நாடு விடுதலைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடேயே பாரதியார் விடுதலை விடுதலை விடுதலை என்று மும்முறைபாடினார்" என்பதுபோன்ற அரிய கருத்துக்களுடன் விளக்கியது அண்ணாவின் சொற்பொழிவு.

மறுநாட்காலை, பி. ஓ. கே. நடராஜபிள்ளை அவர்களின் சகோடயாழிசைக்குப் பிறகு கவியரங்கம் தொடங்கியது. பதினேழு கவிஞர்கள் கவியரசன் பாரதிக்குப் பாமாலை சூட்டி வாழ்த்தெடுத்தனர். பிற்பகல் விழா கவியரசர் பாரதிதாசன் தலைமையில் தொடங்கியது. ச. து. சு. யோகி, பரலி சு. நெல்லையப்பர், நாரண துரைக்கண்ணன், அரசங்கண்ணனார், சிவஞானகிராமணியார், கா. மு. ஷரீப் ஆகியோர் பாரதியின் பாடற்பயன் பற்றி விளக்கஉரை ஆற்றினர்.

'சென்னை நகரம் தமிழர்க்குரியது' என்றும், 'பாரதி இலக்கியங்களைப் பரப்ப இந்நாட்டு மக்கள் யாவருக்கும் உரிமையிருக்க வேண்டும்' என்றும்

திராவிட முன்னேற்றக் கழகக் கொடி

○

நீண்ட சதுரவடிவத்தில், மேல் சரிபாதி கறுப்புநிற மாகவும், கீழ்ச் சரிபாதி சிவப்புநிறமாகவும் அமைந் திருக்கவேண்டும். கொடி யின் அளவு (2 : 3) அகலம் இரண்டுபங்கும், நீளம் மூன்று பங்கும் இருக்க வேண்டும். அகலம் 2-அடி யானல் நீளம் 3- அடி இருக்க வேண்டும் என்பதாகும்.

கறுப்பு: அரசியல், பொருளா தார, சமுதாய வாழ்வி லுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறி குறியாகும்.

சிவப்பு: அம் மூன்று துறை யிலுமுள்ள இருண்ட நிலை யைப்போக்கி, ஒளி நிலையை உண்டாக்க வேண்டும் என்பதைக் காட்டும் அறிகுறியாகும்.

இருண்டநிலையை — ஒளி நிலை அழித்துக்கொண்டுவர வேண்டும் — அழித்துக் கொண்டு வருகிறது, இருண்டவானின் அடியில் தோன்றி எழும்பும் இளம் பரிதி ஒளிபோல என்ற கருத்துடன் கறுப்பு மேலும் சிவப்பு கீழும் வைக் கப்பட்டுள்ளன.

இது திராவிட முன்னேற் றக் கழகத்தின் தற்காலிகக் கொடியாக இருந்துவரும்.

இரு தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.

கவியரசர் தம் முடிவுரையில் தமிழ்நாட்டுக் கோவில்களில் காணப்படும் பல சிற்ப உரு வங்கள் வடவாரியர் கருத்துக் கிலக்கியமாய் நிற்கின்றன வென்றும், அவற்றைத் தமி ழன் கலையென்று கூறிக்கொள் வது பொருத்தமற்றதென் றும், இன்னும் கோயில்களில் வடமொழி வழிபாடு இருந்து வரும்போது 'தமிழன்கோயில்' என்று சொல்லிக்கொள்வதில் பொருள் இல்லை யென்றும் விளக்கிக்கூறினர். (இதுதான் ம. பொ. சிவஞானம் அவர் கள் சொற்பொழிவில் தாம் கொண்ட கருத்து வேறுபாடு குறித்துக் கவியரசர் கூறியது. இதை விடுதலை 'பாரதி விழா வில் குழப்பம்' என்று கயிறு திரித்திருக்கிறது) பிறகு, பாரதிவிழாக் கமிட்டிச் செய லாளர் தோழர் திருஞானசம் பந்தம் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது. பாரதி விழாவிற் கலந்துகொள்ளவந் திருந்த கவிஞர்களும், சொற் பொழிவாளர்களும் அடுத்த நாளும், தங்கியிருந்து, தொழில் வேந்தர் ஜி. டி. நாயுடு அவர் களின், தொழிற்சாலைகளையும், விஞ்ஞான முறையில் வளர்த் திருந்த மா, வாழை, பருத்தி மரங்கள் நிறைந்த தோட்டங் களையும், கண்காட்சிகளையும், மற்றும் பல விஞ்ஞான விந்தைகளையும் கண்டு கேட் டுக் களித்தனர்.

வந்திருந்து இலக்கியச் சுவை பருகிச் சென்ற மக்கள் அனை வரும், தமிழகமெங்கணும், இதுபோன்றதோர் பெருவிழா வைக் கண்ணுற்றதில்லை யெனக்கூறிச் சென்றனர். ○

புரட்சிவேந்தன் பாரதி

—நாரா நாச்சியப்பன்.

வெட்டரிவாள் போல்முறுக்கி விட்ட மீசை
விழிகளிலே ஒளிபெருக்கும் வீரப் பார்வை
கட்டற்ற உரிமைதனை விரும்பும் நெஞ்சம்
கற்பனையில் நனைந்ததமிழ் பாடும் செவ்வாய்
சட்டைக்கு மேல்பழைய கோட்டு, மற்றும்
சரிகையின்றித் தலைமேலே சேரன் போலே
கட்டிவைத்த தலைப்பாகை இதுதான் அந்தக்
கவியரசன் பாரதியின் தோற்றங் கண்டீர்!

கரும்புவிளை தோட்டத்தில் அரும்பு போன்ற
கைவிரல்கள் நோவெடுக்க வேலை செய்யும்
திருநாட்டின் மாதர்நிலை கண்டு கண்ணீர்
சிந்திநின்றான் தொண்டுசெய்யும் சிப்பாய்க் கஞ்சிப்
பெருமக்கள் ஓட்டமெடுத் தொளிந்து வாழும்
பேடிநிலை, பேய்பூதம் பிசாசு போன்ற
வெறும்எண்ணத் தோற்றத்திற் கெல்லாம் அஞ்சி
வீழடிமை நிலைபோக்கத் திட்ட மிட்டான்!

கவிதையினாற் செந்தமிழிற் புரட்சி சேர்த்த
கவியரசன் பாரதியின் கருத்தில் இந்தச்
சுவையற்ற வாழ்க்கைநிலை போக்கும் எண்ணம்
தோன்றியதே நொடிதோறும் தோன்றி இந்தக்
கவைக்குதவா வாழ்வுதனை மாற்ற உன்றன்
கவிதையினைப் பயன்படுத்து! கவின்சேர்வாழ்வைப்
புவியில்உன்றன் தாய்நாடும் பெற்று வாழ்ந்து
புதுநலத்தைச் சுவைக்குமெனக் கூறிற் றாமே!

ஒருநாட்டின் நாகரிக வளர்ச்சி தன்னை
உணர்த்துகின்ற கண்ணாடி இலக்கி யந்தான்!
பெரும்புலவர் பலருமிதை மறந்தார் ஈசன்
பெருமைகளைப்பாடுவதே தொழிலாய்க் கொண்டார்

அரும்புலவன் பாரதிதான் பிறந்த நாட்டின்
அவலநிலை சித்திரித்தான்! இடித்துக் காட்டித்
"திருநாடே விழித்திடுக" எனும் புரட்சித்
தேன்மொழியைச் செவிகுளிரப் பாய்ச்சி விட்டான்!

உழக்குக்குள் கிழக்கென்ற வாறே இங்கே
ஊரெல்லாம் வெள்ளையருக் கடிமை யான
இழுக்கிருக்கும் போதுயர்ந்த சாதி என்னும்
இறுமாப்பும் நிலைத்ததுவே சிலரி டத்தில்!
முழக்கினார் இழிசாதி மக்கள் யாரும்
முன்வரக்கூ டாதென்றே! எதிர் முழக்கம்
முழக்கினான் பாரதிதான் "இந்த நாட்டின்
முடிமன்னர் யாவரும்காண்" என்று ரைத்தே!

பாரதிதன் தாய்நாட்டின் மீது வைத்த
பற்றிற்கோர் எடுத்துக்காட் டுரைப்பேன் கேளீர்!
"சீரியஎன் தமிழ்நாட்டுப் பெண்ணைத் தோற்கச்
செய்யும்அழ குடையாள்இன் னொருத்தி யென்று
கூறினாலும் உளம்பொறுப்ப தில்லை" யென்றே
கூறினான் உயர்கவிஞன் அவனே யன்றோ?
கூறியதும் வீறுதனை உளப்ப டுத்தும்
கொள்கையினா லன்றோசெந் தமிழ்நாட் டாரே!

உரிமையினை முழுமையுற அடைய வேண்டின்
உணர்வடைய வேண்டுமிந்த நாட்டு மக்கள்!
சரியான உணர்வடைய வேண்டு மென்றால்
சற்றேனும் மடமை,யச்சம் கூடா தன்றோ?
புரிந்துகொண்டான் பாரதிதான் அச்சந் தானே
போக்கற்ற அடிமைநிலை சேர்க்கு மென்றே!
வரிந்துகட்டிக் கொண்டடிமை நிலைமை போக்க
வாழ்நாளைச் செலவிட்டான் புரட்சி வேந்தன்!

வாழ்நாளின் பாரதியை இழந்து விட்டோம்!
வந்துவிட்டான்! நம்முளமாம் மண்ட பத்தில்
வாழ்கின்றான்! வீரத்தை வெற்றி தன்னை
வாழ்வுரிமை அத்தனையும் அடைந்த நெஞ்சில்
வாழ்கின்றான்! அவன்உயர்வை எண்ணி எண்ணி
மகிழ்கின்ற பெருமக்கள் உள்ளந் தன்னில்
வாழ்கின்றான்! பாரதிதான் சாக வில்லை!
வாழ்கின்றான்! வாழ்கின்றான்! வாழ்க நன்றே!

[கோவை 'கோபால் பாக்கி'ல் நடைபெற்ற
பாரதிவிழாக் கவியரங்கில் அரங்கேற்றப் பெற்றது]



உலக அரங்கில்!

—டி.கே. சீனிவாசன்—

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

3

கனவுலகம் கலைந்தது. அப்போது தான நிஜ உலகம் அஸ்ராவுக்குத் தெரிந்தது. அந்த நினைவுகள் உண்டாகிச் சென்ற துயரையெல்லாம் ஆழ்ந்த பெருமூச்சொன்றால் துடைத்தெறிந்தாள். திரும்பி அவள் கணவனைப் பார்த்தாள், குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனும் அவளும்! வானம்பாடியை வல்லூறுக்கு வாழ்க்கைப்படச் செய்திருந்ததைப் போலத் தான அந்த இணைப்பு. வானவில்லின் வர்ண ஜாலங்களைப் பார்க்கும்போதுகூட ஆமணக்கெண்ணெய் குடித்தவனைப் போலவே இருப்பான அவள் கணவன் கமால்.

எங்கிருந்தோ அந்த நேரத்தில் மணியொலிகள் கேட்டன. ஒத்து எழுப்பப்பட்ட அந்தகன் காலையில் பாடிய அந்தப் பாட்டுக்குப் பின்னணி தொடங்கியதைப்போல அவளுக்குத் தோன்றியது. மெல்ல வாய்விட்டே பாடத்தொடங்கினாள் அந்த அடிகளை.

"அகிலும் தேக்கும்
அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக்
குவியுங் கடல்கள்
முகிலும் செந்நெலும்
முழங்கு நஞ்சை
முல்லைக்காடு மணக்கும்நாடு.
வாழ்க வாழ்கவே"

தன்னை மறந்து, தன்நிலையை மறந்து, அங்கு நிறைந்திருந்த அமைதியை மறந்து அந்தப் பாடலிலேயே ஆழ்ந்துபோனாள். மணியொலியுங் குரலொலியுங் கூடிக் குலாவத் தொடங்கின!

"அஸ்ரா! இன்னும் தூங்கவில்லையா? மணி பனிரெண்டாகிறதே!"

தம்பதிகள் இணைந்து சேர்த்து முத்தமிடப்போகும்போது எவனோ, ஒரு மூன்றாவது ஆள் எதிரிலிருப்பது தெரிந்தால் எப்படி வெட்கமும் வேதனையுங் கவ்விக்கொள்ளுமோ அப்படியே ஆனது அஸ்ராவின் நிலை.

"இல்லை. தூக்கம் வரவில்லை. இப்போது எங்கிருந்து மணியடிக்கிறார்கள்?"

நிலைமையைச் சமாளிக்க அவள் பயன்படுத்திய அந்த ஆயுதம் பலன் தந்தது.

"இந்து ஆலயத்திலிருந்து!" சுருக்கமான பதில்.

"இந்துக்கள் இரவு பனிரெண்டு மணிக்கொரு முறை தொழுகை நடத்துவார்களா?"

இந்தக் கேள்வியை அஸ்ரா கேட்டபோது அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தைக் கமாலின் சிரிப்பு வெட்கித் தலைகுனிய வைத்துவிட்டது. மசூதிகளில் தொழுகைக்குக் கூவியழைப்பதைப் போலத்தான் மணியடிப்பதும் என்று அந்தப் பேதைப் பெண் எண்ணியதை அவன் புரிந்துகொண்டான். கடவுளை இருகைகளையும் ஏந்தி இரங்கும் கூட்டத்

தைச் சேர்ந்த அவளுக்குக் கூட்பிக் கும்பிடும்கூட்டத்தைப் பற்றி எப்படித் தெரியமுடியும்?

"இல்லை பூஜை செய்வார்கள்" என்று பதிலளித்தான்கமால்.

"அப்படியென்றால் என்ன?" இது அஸ்ராவுக்கு உடனே எழுந்த சந்தேகம்.

"கடவுளைக் கும்பிடுவார்கள். பின் கன்னத்திலடித்துக்கொள்ளுவார்கள்" என்று சொல்லி விட்டு "இத்தோடு முடித்துக் கொள்" என்று அறிவிப்பதைப்போலப் புரண்டுபடுத்தான். இதை அவள்புரிந்து கொள்ளவில்லை.

"ஏன் கும்பிட்டுவிட்டுக் கன்னத்திலடித்துக்கொள்ள வேண்டும்?" என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

"தெரியாத்தனமாக உன்னைக் கும்பிட்டுவிட்டேன். 'தப்பு தப்பு' என்றுதான்! பேசாமல் தூங்கு!" என்று சொல்லிவிட்டுப் போர்வையை இழுத்துத் தலையை மூடிக்கொண்டான் கமால்.

ஏளனமும் வெறுப்பும்! வெளி உலகம் அவளுக்குத் தெரியவில்லை. தெரிவிக்கவும் ஆட்களில்லை. "ஏன் அண்ணை ஒரு படமாவது மத்தியானம் பனிரெண்டு மணிக்குக் கதிரவன் காயும்போது எப்படியிருக்கும் என்பதை எடுத்துக் காட்டவில்லை?" அன்று ஸலாமை அவள் கேட்டபோது இப்படித்தான் எரிந்து விழுந்தான் அவன். இப்போது .....? கமால்! அவளுக்கு உள்ளம்விரிந்து பரந்திருந்தது, உலகம் குறுகிச் சிறுத்திருந்தது!

ஜன்னல் வழியாக உள்ளே வீசிய குளிர்ந்த காற்று மெல்ல அவள் முகத்தைத் தழுவியதால் இரத்தக் குழாய்கள் எல்லாம் புது உற்சாகமடைந்தன. நிலா வானத்தில் அவள் பார்வைக்கு நேரெதிராக இருந்து நகைமுகங்காட்டி வரவேற்பளித்தது. வாயல் புடவையால் உடலை மூடி மறைத்து அங்கங்களை மட்டும் பட்டும் படாமலும் வெளிக்குக் காட்டுவதைப் போல இடையிடையே மெல்லிய வெண் மேகங்கள் சந்திரனை மூடி மறைத்தும் மறைக்காமலும் அவளுக்குக் காட்டி வேடிக்கை செய்தன. ஆள் நடமாட்டமேது மில்லாத அந்த நேரம்! திரும்பி அவள் கணவனைப் பார்த்தாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான் அவன். எழுந்தாள்—பூனைபோல் நடந்தாள் — ஓசைப்படாமல் கதவைத் திறந்தாள்-உலக அரங்கில் கால் வைத்தாள்!

வெளிறிய வானம். அதில் பதித்திருக்கும் ஒளித்தகடு. நிம்மதி நிறைந்த நேரம். மெல்ல ஊர்ந்துநகர்ந்துவந்து உடலைத் தழுவும் மென்காற்று. திருமணமானபிறகு இதயத்தின் ஆழத்தில் பதுக்கி வைக்கப்பட்ட அந்தக் கனவுலகம்! இன்று அவள் கண்ணெதிரே காட்சியளித்தது. தலை முகம் இரண்டையும் போர்த்தியிருந்த வெள்ளைத் திரை நழுவிவிழுந்து கழுத்தைச் சுற்றி மூடிக்கொண்டது. மழைச் சாரல் துளிகள் வீட்டுக்குள் விழும்போது கைநீட்டி அவைகளை ஏந்தியிருக்கிறாள்: அவற்றைவிடக் குளிர்ந்திருந்த அந்தக் காற்று அவளுடைய குதூகலத்தைப் பெருக்கியது. மெல்ல நடந்து சென்றாள்.

பசுமை நிறைந்த வயல்கள் — கண்ணுக்கெட்டிய தூர

பரந்தவெளி! வீசுங் காற்றில் மெல்ல நடம்புரியும் அவளுடைய தலை மயிர்கள் நெற்றியில் ஒருவிதக்குறுகுறுப்பை உண்டாக்கின. கொட்டிக் குவித்த தங்கக் கட்டிகளுக்கிடையேயிருந்து கும்மாளம் போடும் கருவியைப்போல அந்த இயற்கையின் எழிலினிடையே அஸ்ராவின் இதயம் கைகொட்டிக் தாளம் போட்டுக் குதித்துக் கும்மி பாடியது! எத்தனை தூரம் நடந்தாள் என்பதை அவள் கவனிக்கவில்லை. அந்தக் குடிசை கண்ணுக்குத் தெரிந்த பிறகுதான் ஒருமைல் தூரம் வரை அவள் தன்னை மறந்திருந்ததை அவளால் உணரமுடிந்தது.

"பாபா" என்ற குரலை "யாரது?" என்ற குரல் வரவேற்றது. அந்தகன் கதவைத் திறந்தான்.

"யாரம்மா அது?" என்று மறுமுறையுங் கேட்டான்.

"நான்தான்!" என்றாள் அஸ்ரா.

"நீயா? இங்கே தனியாக...! வேறுயாரும்.........?" அந்தக் கேள்விகளில் என்னென்னவோ அர்த்தங்கள் தொக்கி நின்றதை அஸ்ரா புரிந்து கொண்டாள்.

"இல்லை. நான் மட்டுந்தான். வயலையும் வானத்தையும் பார்க்க......"

"ஓ! வாம்மா காட்டுகிறேன்"

இருவரும் அஸ்ராவின் வீட்டுப்பக்கமே திரும்பிவந்தார்கள்.

"பாபா! ஏன் மத்தியானம் கதிரவன் காயும்போது அதை எவரும் சித்திரமாகத் தீட்டுவதில்லை?" கேட்டே விட்டாள் அஸ்ரா.

"எது ஒன்றினால் பாதிக்கப் படுகிறோமோ அதை ரசித்து அனுபவிக்க முடியாதம்மா! காயும் கதிரவன் சித்திரத்தில் எழுதப்படும் அளவுக்கு எழில் நிறைந்த காட்சி அல்லவே!"

"கடவுளை ஏன் இந்துக்கள் கும்பிடுகிறார்கள்? முஸ்லிம்கள் இரு கைகளையும் ஏந்தி அவரிடம் இரங்கி நிற்கிறார்கள்?"

"இஸ்லாம் தோன்றிய அரபு நாடு வளமையற்ற நாடம்மா. அதனால்தான் ஆண்டவனிடம் தேவைகளைக் கேட்கிறார்கள். இந்து மதம் தோன்றிய நாடு வளம் நிறைந்த நாடு. அதனால் தான் பெற்றுக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறார்கள்"

"ஏன் கடவுளைக் கும்பிட்டு விட்டுக் கன்னத்திலடித்துக் கொள்ள வேண்டும்?"

"தேவைகள் எல்லாம் அளவுக்கு மீறிக் கிடைத்தால் மனிதன் பாவகாரியங்களில் ஈடுபட்டு விடுகிறான், அம்மா. ஆகையால் தான் தேவைகளைப் பூர்த்தி செய்ததற்கு நன்றி செலுத்தி அதனால் செய்த பாவங்களுக்குமன்னிப்புகோரக் கன்னத்திலடித்து இனிமேல் செய்ய மாட்டோம் என்று அறிவிக்கிறார்கள்"

அஸ்ராவுக்கு எல்லாம் புரிந்து விட்டது. இனி எப்போதாவது ஏதாவது சந்தேகந் தோன்றினால் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆளுங் கிடைத்து விட்டது! கவலை ஏதுமில்லாமல் அந்தப் பால் வண்ணநிலவொளியில்பச்சைப் பசேலென்றிருந்த வயல்களினூடே அந்தகன் தனக்கு வழி காட்ட மெல்ல அடியெடுத்து வைத்து நடந்தாள் அவள். திடீரென அவளுக்கு மாபெரும் சந்தேகம் ஒன்றெழுந்தது.

"பாபா! இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"நான் வாழ்க்கையோடு போராடப் பிறந்தவனம்மா. எதையுங் கவனிக்கிறேன். ஆனால் அவைகளிலேயே ஆழ்ந்து பதிந்து விடாமல் என நிலை தடுத்து விடுகிறது. ஆகையால் சிந்தித்து நல்ல முடிவுக்கு வரவேண்டியிருக்கிற தம்மா"

இருவரும் ஊருக்குள் நுழைந்து விட்டார்கள். அவள் வீடு நெருங்கிவிட்டது. இனி நிம்மதியாக எந்தவிதக் கவலையு மில்லாமல் அவள் தூங்கலாம். மனதில் நிரம்பியிருந்த ஆசைகள் எல்லாம் ஒருவிதமாகப் பூர்த்தியடைந்து விட்டன. கதவைத் திறந்தாள். தாளிடப் பட்டிருந்தது. எரிமலையும் பூகம்பமும் இதுவரை அவளுக்குத் தெரியாதவை. அவை அப்போது அவள் உள்ளத்தில் திடீரெனத் தோன்றி ஆட்டம்; புகை, அனல் கங்குகள் மூன்றையும் ஏற்படுத்தின. மெல்லத் தட்டினாள். கதவு திறந்தது.

"எங்கே போயிருந்தாய்?"

எதிர்பாராத நேரத்தில் காதுகளில் விழுந்த அதிர்வேட்டின் ஒலி அப்படியே உடலை ஒரு முறை குலுக்கி நடுங்கவைப் பதைப் போல அந்தக் குரலொலி அவளை அதிரச் செய்தது.

"எவனிடத்தில் போயிருந்தாய்?"

நீரைக் கக்கும் விழிகள் — நெருப்பைக் கக்கும் உள்ளம் — ஆனால் பதிலைக் கக்கமுடியாது அடைத்துப் போன வாய் — இவைதான் அஸ்ராவுக்கு அப்போது ஏற்பட்ட நிலைமை.

"இனிமேல் உனக்கு இங்கே இடங்கிடையாது, போ"

கதவு தாளிடப்பட்டது. காட்சி முடிந்து விட்டது. மூன்றே கேள்விகள்! அவைகளிலேயேவிசாரணை, குறுக்குக் கேள்வி, தீர்ப்பு எல்லாம்!

"வாம்மா போகலாம்! இனிக்மேல் இங்கே இருந்தால் பலனேதும் கிடைக்காது. பழிச்சொல்லும் இழிநிலையுந்தான் இந்த இடத்தில் உனக்கு இனி கிடைக்கும"

பேசாமல் அவனோடு கூட நடந்தாள் அஸ்ரா. அவளுக்கு ஏற்பட்ட திகிலும் திகைப்பும் இன்னும் அடங்கவில்லை. உள்ளம் இன்னும் அதிர்ந்து கொண்டுதானிருந்தது. இருவரும் ஊரைத் தாண்டிவிட்டனர்.

"பாபா! குரானில் என்ன எழுதியிருக்கிறது என்று அன்றொருநாள் சொன்னீர்கள்?"

"இச்சையைத் தூண்டிவிடும் அங்கங்களை மறைத்தால் போதும் என்றுதானம்மா எழுதியிருக்கிறது"

"பின் ஏன் இவர்கள் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள்?"

"சந்தேகம், பயம், மிருக உணர்ச்சி மூன்றும் மனித உள்ளத்திலிருந்து சுரண்டும் வரை இந்த விதமான பழக்க வழக்கங்கள் இருந்துதானம்மா தீரும்!"

இருவரும் நடந்துகொண்டே போனார்கள். திறந்த வெளி, எங்கோ வெகுதூரத்தில் மண்ணைக் கட்டிப்பிடித்து முத்தமிடும் வானம், பசுமை நிறைந்த வயல்கள், நீண்ட பாதை, அவற்றிடையே தன்னந் தனியே இருவரும் நடந்து கொண்டே இருந்தார்கள். அந்தகன் — பெண்! உலகம் அவர்கள் இருவரையுமே கவனிக்கவில்லை. ஏன்......? அது தான் தெரியவில்லை! ●



உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

14. ராசி எழுத்தாளர்

ராசி எழுத்தாளர் ரங்கசாமியைத் தெரியாதவர்கள் மதுரையிலே கிடையாது எனலாம். நான் இப்பொழுது கூறப்போவது 'கலையுலகமும், ரங்கசாமியும்' என்பதைப்பற்றித்தான். அவர் எழுத்தாளராக அவதாரம் எடுத்த நிகழ்ச்சியே ஒரு எட்டாவது அதிசயம்.

தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்பதுபோல பேனாவைக் கையில் பிடித்தவனெல்லாம் எழுத்தாளனாகும் அதுவும் பார்க்கர் பேனாவைக் கையில் பிடித்தவனெல்லாம் எழுத்தாளனாகும் பொழுது, அதுவும் பார்க்கர் பேனாவை எந்நேரமும் கையில் வைத்திருப்பவர் (பேனாவைப் பாக்கெட்டில் வைக்க யாருமே பயப்படுவார்கள் மதுரையிலே! அவ்வளவு நல்ல ஊர்) ஏன் ஒரு எழுத்தாளனாகக்கூடாது என்ற விசித்திர எண்ணம் தோன்றிற்று அவர் நெஞ்சிலே! தீர்மானத்தைக் காற்றிலே பறக்கவிடும் பேர்வழியல்ல அவர்! உடனே காரியத்தில் இறங்கத் தொடங்கினார். தனது பழையபோட்டோ ஒன்றை எடுத்து, அதோடு கூட இரண்டு 'அத்திம்பேர் அம்மாமிக் கதைகளை' வைத்து, ஒரு பேர்போன பத்திரிகைக்கு அனுப்பிவிட்டார். அவரைப் பொறுத்தவரையிலே சந்தேகமே கிடையாது. தெரு மூலையிலுள்ள முனிசிபாலிடித் தொட்டியிலே போடுவதற்குப் பதிலாக, பத்திரிகை ஆபீஸுக்கு அனுப்பிவிட்டார்! ஆனால் கலையுலகத்திற்குப் பிடித்த கஷ்டகாலம், அவரது கதைகளைப் பிரசுரிப்பதாக அந்தப் பத்திரிகையாசிரியரும்ஒத்துக்கொண்டதுதான். அடுத்தவருடம் தீபாவளி மலரில், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் என்ற தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த பட்டியலில் அவர் பெயரும் வந்துவிட்டது. பிறகு வேறென்ன ருசு வேண்டும்? அந்த "டிரேட்மார்க்கை"ப் பக்குவமாக உபயோகிக்க ஆரம்பித்தார்.

'பேர்மார்க்கட்' அப்போது கொஞ்சம் 'டல்'லாக இருந்தது. அதற்கும் ஒரு வழி செய்தார். பேசாமல் ஒரு அரசியல் தலைவரைப் பிடித்துக்கொண்டு, அவரைப் பற்றித் திட்டு திட்டென்று சரமாரியாகத் திட்டி எழுத ஆரம்பித்தார். தாக்கப்பட்ட நண்பர் எனது தோழர். அவருக்கு ரங்கசாமியைப்பற்றியும் அவருடைய அறிவுத் திறனைப்பற்றியும் நன்ருகத் தெரியும்.

"வார்த்தைகள் கரடு முரடாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அந்த மனிதரைச் சமாதானம் செய்துகொள்ளலாம். எப்படியோ, நமது முதுகு பிழைக்கும்" என்ற நம்பிக்கை ரெங்கசாமிக்கு இருந்தது. எனவே அவரை மனதில் நினைத்துக்கொண்டு காரசாரமாகக் கட்டுரைகள் பல தீட்டினர். அகராதியிலிருந்து குறிப்பிட்ட சில சொற்களைப் பொறுக்கிக் கொண்டார். "பட்டினிப் பட்டாளம்......தாயின் விலங்குகள் ...... எங்கள் முதுகெலும்புகளை முறிப்போம் ..." இப்படிப்பட்ட வார்த்தைகள் முக்கியமாகத் தேசிய வாசிகளையும் சுதந்திர நாசிகளையும் பெரிதும் கவர்ந்தன. அபாரப்புகழ் மாலை! கூட்டத்திற்குத் தலைமை தாங்க அழைப்பு! எதற்கும் தயங்குவதில்லை ரெங்கசாமி.

ஒரு சமயம் பெரிய கூட்டம். 'விதிவிலக்கு' என்பதுபற்றி ரெங்கசாமியைப்பேசும்படி தலைவர் கூறினர். அவர் எழுந்தார். தலைவரை மனதில்வைத்துக்கொண்டு, பேச ஆரம்பித்தார். தலைவருடைய தலைமட்டும் பிரிஜிடயருக்குள் இருப்பதுபோல் அவருடைய உடலெல்லாம் புளகாங்கிதமாகிவிட்டது. தலைவரைப்பற்றிய புகழ் வார்த்தைகளையே முறம் முறமாகக் கொட்டினர். அடுக்குச் சொற்களை அள்ளி வீசினர். பொதுவாக, அன்றைய அவருடைய பேச்சைப் பொது மக்கள் விரும்பாவிட்டாலும், தலைவர் பெரிதும் விரும்பினர். ரெங்கசாமி விரும்பியதும் அதைத்தான். ஏனென்ருல் அவர் ஒரு தினசரிப் பத்திரிகையின் முதலாளி!

மறுநாளே ரெங்கசாமிக்கு உதவி ஆசிரியர் வேலை கிடைத்தது. புனைபெயர் 'ராசி' ரங்கசாமியின் வேலை இன்னும் சுலபமாகிவிட்டது. ஆனல், கேவலம் உதவி ஆசிரியாாக மட்டும் இருக்க அவர் விரும்பவில்லை. மேலும் மேலும் முன்னேற விரும்பினர். அவருடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. முயற்சி தளரவில்லை. ஆசிரியரின்மீது இல்லாத பழியெல்லாம்சுமத்தி, அவரைவேலையை விட்டு நீக்க, அவருக்குப் பல விதத்தில் 'நல்ல' உதவிகளெல்லாம் செய்து, கூடியசீக்கிரத்திலேயே, ரெங்கசாமி அமர்க்களமாக ஆசிரியப்பீடத்தில் அமர்ந்தார்.

தன்னுடைய தலையங்கத்தில் 'எதைப்பற்றி எழுதினேம், ஏன் எழுதினேம்' என்று அவருக்கே தெரியாது. திட்டுதிட்டென்று, யாரையாவது மனதில் வைத்துக்கொண்டு திட்டி எழுதுவார். அதில் தவறுகளும், அர்த்தமற்றவைகளும், காரணமில்லாத கட்டளைகளும் நிறைய இருக்கும். ஆனல் அவை, அவரையறியாமல் நேர்ந்த பிழைகளென்ருல் நிச்சயம் ஒப்புக்கொள்ளவே முடியாது. அவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்.

ஆசிரியரான பிறகு அவருடைய செல்வாக்கைப் பல வகைகளில்பயன்படுத்த ஆரம்பித்தார். சினிமாவுக்குச் செல்வதிலிருந்து, ஓசியாகச் சிகரெட் குடிப்பதுவரைக்கும் தன் ஆசிரியப் பெருந்தன்மையை அற்புதமாகப் பிரயோகித்து அதில் வெற்றியும் கண்டார்.

அவரைப்போல் வேறுயாரும் சிவப்பழமாக நடிக்கவே முடியாது. ஆனால் ஒரே ஒருவர் உண்டு. அது அவரே தான். அவர் ஆசிரியரான பிறகு கதரணிய ஆரம்பித்தார். நீளமான முழுக்கை ஜிப்பா! கைவிரல்கள் கூட வெளியே காணப்படாதவாறு, குஷ்டரோகிகள் அணியும் சட்டையைப்போல அது இருந்தது. தோளிலே ஒரு பழுப்பு நிறமான கோணிச்சாக்கு! (துண்டு) காலில்செருப்பு அணிவதே கிடையாது. அவர் செய்யும் அயோக்கியத்தனத்திற்கு அதையும் காலில் அணிந்திருந்தால் வேறு வினையே தேவையில்லை. உதைபட்டாலும் படலாம். தனது சொந்தக் கருவியால் அதை வாங்கிக்கொள்வது நன்றாயிருக்குமா? அதனால் காலிலே எதையுமே அணிவதில்லை. தலைபாட்டை! "ஆழ்ந்து உழைக்கிறார், அயராது பாடுபடுகிறார்" என்று எண்ணெய்படாத தலையாவது எடுத்துக் காட்டட்டும் என்ற எண்ணம! தெருவில் நடமாடும்போது யாருடனும்பேசுவதில்லை! அப்படியே வலிய வந்து பேசினாலும் சரியாகப் பதில் சொல்வதில்லை!

"ஏன்சார், ஜப்பான் ஜெயிச்சிடுவான்லெ?"

"ஏன்?"

"இல்லே......கேட்டேன்"

"ஓகோ......"

"நாளைக்கு என்னங்க முக்கியமான சேதி?"

"நாளைக்குப் பேப்பர்லே வரும்"

"இந்த விலை உயர்வைப் பத்தி என்னமும் இருக்காங்க?"

"இருக்கலாம்"

"அப்பக் கொஞ்சம், சொல்லுங்க"

'சரி, பார்ப்போம்......"

"நான் வர்ரேனுங்க"

"போங்க." உரையாடல் இந்தவிதமாகப் போகும்.

அகம்பாவமான பேச்சு, வீதிகளில் மட்டுமல்ல, வீட்டிலும் தான். செருக்கு தலைக்கேறிப் போயிருந்தது: யாருடனும முகங்கொடுத்துப் பேசுவதில்லை. முகஞ்சுருங்கியும் பேசுவதில்லை. ஒரே போஸ்! அசல் புல்டாக் மூஞ்சி மாதிரி. சில சமயங்களில் அவர் முகம் அழுகிய மாம்பழம் போலிருக்கும். ஒரே ஒரு சமயம்தான் அவர் சிரித்த முகத்துடன் காணப்படுவார். அது, அவருடைய முதலாளி முன் சம்பளப்பணம் வாங்கும்போது தான்.

ஏதோ அவர் வாழ்க்கைச் சக்கரம் ஒருவகையாக உருண்டு கொண்டிருந்தது. அதற்கு எதிர்ப்பட்ட ஒரு கல்லின்மீது வண்டி மோதியதால், சக்கரத்தின் அச்சே முறிந்துவிட்டது. அந்த வேடிக்கையான சம்பவத்திற்குப் பின் அவருடைய நிலைமை அடியோடு மாறிவிட்டது. அவள் (அது தான்! அந்தக் கல்!) மட்டும் குறுக்கிடாமலிருந்தால்......

பாவம்! ரெங்கசாமி கலையுல கத்திலிருந்து கல்த்தாக் கொடுக்கப்பட்டார். காரணம்? காதல் விவகாரத்தில் ஏற் பட்ட சிறுபோட்டி! கலையை யும் காதலையும் கவனிக்க ஆரம் பித்தால், இரண்டும் உருப் படாது என்ற உண்மை ராசி எழுத்தாளருக்குப் புரியாமல் போனதும் காதல் வேகந் தானோ அல்லது வேறு இழவோ! மீதிக் கதையையும் கேளுங்கள்.

சரஸா அவரது வாழ்க்கைப் பாதையில் நுழைந்தாள். எதிர் வீட்டுக்காரி. காலேஜில் படிக் கும் காரிகை! கறுப்பிலும் மின்னிடும் கறுப்பு என்று சொல்வார்களே, அந்த ரகத் தைச் சேர்ந்தவள் அவரது காதலி. அவருடைய எழுத்து வெம்மை, இழுப்புப் பேச்சு, வெளிறிய தோற்றம், மேனி மெலிவு-இவைகள் அவளுக்கு அவர்மீது படு அபிப்பிரா யத்தை உண்டு பண்ணிவிட் டதாம். அவள் தினந்தோறும் கால் அல்லது அரைமணி நேரம் காமத்தீயில் கருகிவிடு வாளாம். அவரது கண்கள் அவளது நெஞ்சைத்துளைத்து விட்டதாக-இப்படி ஒரு கடிதம் ரங்கசாமிக்கு வந்தது. எனவே இதைப் படித்தபிறகு அவர் மனமும் பொறுக்கவில்லை. அவள்தரும் காமக் கனலில் அவரும் உருகினார். சந்திப்பு வளர்ந்தது!

அவர்கள் காதல் இழுத்த இழுப்புக்கெல்லாம் நீளும் ரப் பர்த் துண்டு! அவளோ பணம் என்ற பள்ளத்தாக்குக்கு இழுத்தாள். அவரோ இலக் கியச் சோலைக்கு இழுத்தார். முடிவில், அவள் கையை உதறி விடவே, ராசி எழுத்தாளர் நிலையற்றுப் விழுந்தார். இந்த நிலைமையில், முதலாளி, அவ ளைத் தன் கொண்டியிலே அடைக்க, இருபது பவுன் சங் கிலி ஒன்றை எடுத்து வீசி ஞர். அந்தக் கிழத்துக்கு என்ன கேடுவந்ததோ தெரிய வில்லை! ரங்கசாமியை ஆபீஸி லிருந்தே துரத்திவிட்டார்.

வேலையைவிட்டு, நீக்கின தற்கு, "ரங்கசாமிக்கு எழுதவே தெரியவில்லை" என்ற கார ணத்தைக் காட்டினர். அடே யப்பா! அந்தச் சங்கதிதான் எல்லாருக்கும் தெரிந்ததா யிற்றே! காரணம்வேறு! எல் லாம் அந்தக் கங்காரு - அவ ருடைய காதலி செய்த வேலை தான். ரங்கசாமியின் வாய் ஒரு 'ஒலிபரப்பும்' கருவி என் பதைத் தெரிந்துகொண்ட அவள், அவரை அருகிலேயே விட்டுவைக்க விரும்பவில்லை. ராசி எழுத்தாளரும், தமிழ் நாட்டு பத்திரிகைகளின் வளர்ச்சியைத் தடைப்படுத்த மனமில்லாமல் "மாஜி-" ஆகி விட்டார். இவ்வளவுதான் அவரது கலைவாழ்வு!

இன்று, தமிழ்நாட்டில், கலை யின் பெயரைச் சொல்லிக் கொண்டு, 'டிரேட்மார்க்' எழுத்தாளர்கள் செய்யும் அயோக்கியத்தனத்திற்கு அளவே இல்லை. எதை எழு தினும் சரி, குப்பை கூளத்தை எழுதினாலும் சரி, கலை கலை என்று கூப்பாடுபோட்டுக் கதைக்கிறார்கள். ராசி எழுத் தாளர்களின் காலம் மங்கிக் கொண்டு வருகிறது என்பதை அவர்கள் உணரவேண்டும் என்பதுதான் என் விருப்பம்!

வணக்கம்

வழிப்போக்கன்

வடமொழி இலக்கியம்

அறிஞர் கா. அப்பாத்துரை

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

தண்டி : தசகுமார சரிதம்

அணிநூல்கள்

பாணனைப் போலவே இரு துறைகளில் ஈடுபட்டு இரண்டிலும் பாணனைவிடப் பெருஞ்சிறப்புற்ற மற்றொரு புலவன் தண்டி. இவன் தமிழகத்தில் காஞ்சியில் வாழ்ந்தவன்: பாரவி மரபில் வந்தவன் என்றுகூட அறிகிறோம். இவன் 'காவியாதர்சம்' என்ற அணிநூலும் (அலங்காரசாஸ்திரமும) தசகுமார சரிதம் என்ற புனைகதைக் காவியமும் இயற்றியுள்ளான். வடமொழியின் தலைசிறந்த அணிநூலாகிய காவியாதர்சமே அதன் முதல் அணிநூலாகவும் இருக்கக்கூடும். ஏனெனில் இவரே தமிழிலும் 'தனி' அணிநூலாகத் தண்டியலங்காரம் இயற்றியவர் என்று அறிகிறோம். ஆயினும் இவருக்கு முற்பட்டும் அணிநூல்கள் சில இருந்ததாக இவர் குறிக்கிறார். பாமஹன் என்ற அணிநூலாசிரியர் இவருக்கு முற்பட்டவர் என்று கூறுபவரும் உண்டு.

தசகுமார சரிதம் வடமொழியின் புனைகதை நூல்களில் இலக்கியப் பண்புகளில் தலைசிறந்தது. முதிர்ச்சிக் காலத்தின் தொடக்கத்திலிருந்த இவர் தம் அணி இலக்கணத்தில் விதர்ப்ப, கௌட நெறிகளை வகுத்துக் கூறினும் முந்இயதையே தழுவுகின்றார்.

தண்டி, பாமஹன் ஆகியவர்களைப் பின்பற்றி 12-ம் நூற்றாண்டுக்குள் வாமனன், உத்படன், ருத்ரடன், ஆனந்தவர்த்தனன் ஆகிய பலர் அணிநூலாராய்ச்சியி லீடுபட்டனர். ஆனந்தவர்த்தனர் த்வன்யாலோகத்தில் கவிதையின் உயிர்நாடி 'த்வனி' அல்லது குறிப்பே என்று கூறினார்.

சமயத்துறை உரைநடை

சங்கரர் பக்திநூ கள்

வடமொழியில் உரைநடை தனி இலக்கியத்துறையாக வளரவில்லை. கதை இலக்கியத்தில் அது கவிதைபோன்ற கடுநடைப் பேணிற்று. ஆனால் நல் இலக்கியம் என்று கூற முடியாத சமய நூல்துறையில் ஒப்பற்ற உரைநடைத் துறையாளர் ஒருவர் எழுந்தார். இவரே கேவல அத்துவைத வாதியாகிய சங்கரர். இவர் வடமொழில் நல்ல பேச்சாளர். இந்தியாவெங்கும் சென்று புத்தர்களையும் ஏனையகோட்பாட்டினரையும் வாதிட்டு வென்று தம் கோட்பாட்டை நிறுவினார். மலையாள நாட்டில் (காலடியில்) பிறந்து காஞ்சியில் வளர்ந்த இவர் உபநிடதங்கள், பிரமசூத்திரம் முதலிய நூல்களுக்கு உரைகண்டார். இவ்வுரைகளில் அவர் ஒப்பற்ற மொழிப் புலமையும், சொல் திட்பமும்,

பொருள் நுணுக்கமும் வெளிப்படுகின்றன.

சங்கரரே வடமொழிக் கவிதைகளிலும் ஒரு புதுத் துறை வகுத்தவராவர். தமிழில் 7-ம் நூற்றாண்டில் பேரளவாய் எழுந்த பத்திநூல்களை ஒட்டி இவர் வடமொழியில் சியாமளாதண்டகம், சிவானந்தலகரி, சௌந்தரியலகரி ஆகிய இனியபக்தி உணர்ச்சிப் பாக்கள் இயற்றினார். இவற்றுள் 'சியாமளா தண்டகம்' நீண்ட யாப்பிலமைந்த இசைப் பாடல்களான திருநாவுக்கரசர் தாண்டகங்களை நினைவூட்டவல்லன. இந்நூல்களில் சங்கரர் வடமொழியில் கடுமையான உரம் பொலிகளை நீக்கியும் வடமொழியில் இதுவரைவழங்கப்படாத எதுகை மோனைகளைக் கையாண்டும் தமிழோசையமையப் பாடியுள்ளார். கண்ணப்பர், சாக்கியர், சம்பந்தர் முதலிய தமிழ் பக்தி இலக்கியத் தலைவர்களையும் இவர் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

வேதாந்த தேசிகர்
ஹம்ச சந்தேசம்

தமிழகத்தில் சங்கரரின் பணியைப் பின்பற்றிய பிற சமயக்கோட்பாட்டாளர்கள் நீலகண்டர், ஹரதத்தர், இராமானுஜர் ஆகியவர்கள். கன்னட நாட்டில் மத்துவரும் வங்கநாட்டில் சைதன்னியரும் இதே பணியாற்றினர். தமிழகத்தில் இராமானுஜரின் சீடரும் வடகலை தோற்றுவித்தவரும் ஆன வேதாந்த தேசிகர் வடமொழியிலும் தமிழிலும் சிறந்தகவிஞர். இவரால் ஹம்ச சந்தேசம்என்றதூதுத்துறைக் காவியமும் யாதவர் உதயம் என்ற காவியமும் பிரபோதச் சந்திரோதயத்தைப் பின்பற்றி சங்கல்ப சூர்யோதயம் என்ற நாடகமும் எழுதப்பட்டன. இவற்றுள் ஹம்ச சந்தேசம் காளிதாசன் மேக சந்தேசத்திற்கு அடுத்தபடியாயுள்ள தூதுத்துறை நூல்.

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
(சம்பூ)—போஜன்

வடமொழியில் மிகவும் பிற்பட்டுத் தோன்றிய மற்றொரு புதுத்துறை சம்பூ அல்லது உரை யிடையிட்ட பாட்டுடைக் காவியம் ஆகும். தமிழகத்தில் சிலப்பதிகாரமரபுரையன்றி இதுபற்றி எதுவும் நமக்குக் கிட்டவில்லை. ஆனால் மலையாளநாட்டில் இது தொடர்ந்து வளர்ச்சியடைந்து வடமொழி நாடகங்களில் வழங்கப்பட்டது. மலையாளத்தில் இது காவியங்களிலும் 12, 13ம் நூற்றாண்டில் பெரு வழக்காயிருந்தது. வடமொழியில் இது 9ம் நூற்றாண்டில் சிறுகத் தொடங்கி 12-ம நூற்றாண்டிலேயே சிறப்புற்றது. தொடக்கத்தில் அதாவது 9-10ம் நூற்றுண்டுகளில் இத்துறையைக் கையாண்டவர்கள் பெரிதும் சமணரேயாவர். ஹரிச்சந்திரனின் ஜீவந்தர சம்பூ, விக்ரம பட்டரின் நளசம்பூ அல்லது தமயந்திகதா, சோமதேவசூரியின் யசஸ்திலக சம்பூ அல்லது யசோதா மகாராஜ சரிதம், 11-ம் நூற்றுண்டினரான ஸோட்டலரின் அவந்திசுந்தரி கதா ஆகியவை இத்திறத்தவை. இத்துறையிலக்கியத்தின் தலைசிறந்தநூல் போஜன் என்ற அரசன் இயற்றிய இராமாயண சம்பூவேயாகும். இது தென்னாட்டில் போஜ சம்பூ

என்ற பெயரால் சம்பூ இலக்கியத்தின் முன் மாதிரியாக வழங்குகிறது. வேதாந்ததேசிகர் விச்வகுணதர்ச சம்பூ என்ற ஒரு சம்பூ காவியமும் இயற்றியதாக அறிகிறோம்.

தாய்மொழிகளின் வளர்ச்சியும் வடமொழியின் நலிவும்

வைணவ இயக்கம்

நலிவுக்காலம் (12ம் நூற்றாண்டுக்குப்பின்)

இராமாநுஜரின் வைணவ இயக்கம் தமிழகத்திலிருந்து தொடங்கி இந்தியா முழுவதும் பரவிற்று அதன் பயனாக தாய்மொழி யிலக்கியம் எங்கும் தலை தூக்கிற்று. வடமொழி இலக்கிய வாழ்வுக்கு இது ஒரு முற்றுப்புள்ளியாயிற்று. அதனை உணர்ந்த இராமாநுஜர் சீடரான வேதாந்த தேசிகர் வடகலை தோற்றுவித்து வடமொழிக்குப் புத்துயிர் தர முயன்றாராயினும் அதனாலும் புத்திலக்கிய வளர்ச்சி ஏற்படவில்லை. தாய்மொழிக் கவிஞர்களே தம் புகழ் பரப்ப வடமொழியில் சில நூல் எழுதலாயினர். இதுவும் வரவரக் குன்றி 12ம் நூற்றாண்டுக்குள் வடநாட்டிலும் 16-ம் நூற்றாண்டுடன் தமிழகத்திற்கு வெளியே தென்னாட்டிலும் 18ம் நூற்றாண்டுக்குள் தமிழகத்திலும் வடமொழி இலக்கியவாழ்வு முடிற்றது.

பிற்காலக் கதையிலக்கியம்

நலிவுக் காலத்திலும் ஓரளவு வளர்ச்சியை யடைந்ததெனக் கூறத்தக்க இலக்கியம் தாய்மொழி யிலக்கியத்திலிருந்து வடமொழிக்கு மிகப்பிந்திவந்த கதைத் துறையே, 'பெருங்கதை' இலக்கியத்தின் கதைகளைச் சுருக்கியும் விரித்தும் இலக்கிய நயம்படப் பல புதுக் கதைகள் நாளடைவில் எழுந்தன. கி. பி. 11ம் நூற்றாண்டுக்கு முன்பே கிளி எழுபது (சுக சப்ததி) வழங்கியிருந்ததாக அறிகிறோம். இந்தியரிடமிருந்து பாரசீகம் சென்ற இக்கதை மீட்டும் இந்தியாவில் உருதுவிலும் இந்தியாவில் உலகின் பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இதனைப் பின்பற்றி விக்கிரமாதித்தன் கதையெனத் தாய்மொழிகளில் வழங்கப்படும் 25 வேதாளக் கதைகள் (வேதாள பஞ்சஷிம் சதி) 32 பதுமைக்கதைகள் (சிம்ஹாசனத்வாத்ரிம்சிகா) ஆகியவை பெரு வழக்காயின. இக்கதையிலக்கியங்களின் புகழலைகளிலிருந்தே அராபிக் கதைகள், மேனாடுகளில் வழக்கிய பொக்காச்சியோ, சாஸர், பான்டேன் கதைகள் எழுந்தன என்று அறிஞர் கூறுகின்றனர்.

ஜெயதேவர் கீதகோவிந்தம்

13-ம் நூற்றாண்டில் வங்க நாட்டில் வடமொழியில் வைணவஇயக்க அலையில் ஈடுபட்டு ஜயதேவர் என்பவர் சங்கரர் புகழ்ப்பாக்களைப் பின்பற்றிக் 'கீதகோவிந்தம்' என்ற பக்திப் பாடல்நூலும் "பிரசன்னராகவம்" என்ற நாடகமும் இயற்றினர். இவர் பாடல்கள் பஜனைகளுக்கும் கச்சேரிகளுக்கும் ஏற்ற பண்ணியல்பும் உணர்ச்சியார்வமும் எழுச்சியும் உடையன.

விஜயநகர காலம்

16-ம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசை நிறுவ உதவிய வித்யாரண்யரே வேதங்களுக்கு முதன் முதலாக உரைஎழுதினர் என்பர். சிலர் அவ்வுரைகாரர் அவன் உடன் பிறந்தார் என்பர். வித்யார

ண்யர் ஆதிசங்கரரின் கதையான சங்கர விஜயம் இயற்றினார்.

விஜயநகர அரசன் புக்கனின் புதல்வனாகிய கம்பனன் மதுரையை வென்று ஆண்டகதையை அவன்மனைவி கங்காதேவி மதுரா விஜயம் என்ற காவியமாகவும், கிருஷ்ண தேவராயர் நாச்சியாழ்வார் என்ற பெண்ணாழ்வார் கதையையும், அச்சுதராயர் மனைவியாகிய திருமலாம்பா தம் கணவர் வாழ்வையும் திருமணத்தையும் பற்றிய வரதாம்பிகா பரிணயம் என்ற சம்பூ நூலையும், தஞ்சையரசன ரகுநாதன் மனைவி ராமபத்ராம்பா (17-நூற்றாண்டு) அவர் வரலாறாகிய ரகுநாதாப்யுதயம் என்ற காவியத்தையும் எழுதினர். 15ம் நூற்றாண்டில் இராமானுஜ தாசரால் இராமாநுஜ சம்பூ எழுதப்பட்டது.

தமிழகக் காலம்

அப்பைய தீட்சிதர்; செகன்னாதர்;
நீலகண்ட தீட்சிதர்

நலிவுக்கால இலக்கியத்திடையே அனைத்திந்தியப்புகழ் பெற்ற பெருங்கவிஞர்கள் அபபைய திட்சதர், ஜகன்னாதபண்டிதர், நீலகண்ட தீக்ஷிதர் ஆகியவர்களே. இவர்களுள் முதலிருவரும் நலிவுக்காலத்தின ஒப்பற்ற அணியியல் துறைப் புலவர்கள். அப்பய்ய தீக்ஷிதர் 16-ம் நூற்றாண்டினர். அவர் அணி நூல்கள் சித்ர மீமாஞ்சையும் குவலயானந்தமும ஆகும். ஜகன்னாதர் அடுத்த நூற்றாண்டில் தெலுங்கநாட்டில் பிறந்து வடநாட்டு முகலாய அரசரிடம் சென்று தங்கியவர். இவர் இஸ்லாமியப் பெண்ணை மணந்ததாகவும் கூறுவர். இவர் அபபய்ய திட்சதரின் கோட்பாடுகளை எதிர்த்துச் சித்ரமீமாம்சா கண்டன

மும் ரஜ கங்காதரம் என்ற நாலும் இயற்றினர். நீலகண்ட தீக்ஷிதர் 17ம நூற்றுண்டில் மதுரைத் திருமலை நாயக்கன் அமைச்சராயிருந்து புலவர்களை ஆதரித்த புலவர் பெருமான். இவர் அப்பைய தீக்ஷிதரின் உடன் பிறந்தாரின் பெயரன் ஆவர். நள சரித்திரம் என்ற நாடகம், நீலகண்ட விஜயம் என்ற சம்பூ காவியம சிவ லீலார்ணவம், கங்காவதரணம முதலிய பல காவியங்கள் ஆகியவை இவர் இயற்றிய நூல்கள். ராஜசூடாமணி தீக்ஷிதர் ராமபத்ர தீக்ஷிதர், நல்லா தீக்ஷிதர் ஆகியவர்களும் தமிழகத்தில் இக்காலத்தில் திகழ்ந்தவர்கள். ராஜசூடாமணி கல்யாணம் என்னும காவியமும் ஆனந்த ராகவம், கமலினி கலஹம்சம் முதலிய நாடகங்களும் அணிநூல் ஒன்றும இயற்றினர். இராமபத்திரர் சிருங்கார திலகம், ஜானகிபரிணயம். என்ற நாடங்களும நல்லா தீக்ஷிதர் சுபத்ராபரிணயமும் இயற்றினர்.

19ம் நூற்றுண்டு-மலையாளநாட்டு இலக்கியம்

முத்துச்சாமி தீக்ஷிதரும் திருவாங்கூர் அரசரான சுவாதித் திருநாளும் வடமொழியில் நல்லிசைப் பாடல்கள் யாத்தனர். வடமொழி இலக்கிய வாழ்வு 19-ம் நூற்றுண்டிலும தொடர்ந்து ஓரளவு சுடர்விட்ட பகுதி மலையாளமே எனலாம். 18ம் நூற்றுண்டில் தேவராஜன் யுவராஜன் ஆகியவர்களால் பாலமார்த்தாண்ட விஜயம், ரஸஸதனம் ஆகிய நாடங்களும் பத்தொன்பதாம் நூற்றுண்டில் நீலகண்டன் கல்யாண சௌகந்திகம், பாஸ்கரன் சிருங்கார லீலாதிலகம ஆகியவையும் இவ் விறுதிக் காலத்தவை.

முடிவுரை

வடமொழி இலக்கியம் இங்ஙனமாக 700 ஆண்டு தொடர்ந்த வளர்ச்சியும் பின்னும் பலநூற்றுண்டு தளர்ச்சியுற்ற வாழ்வும் உடையதாயிருந்து வந்துள்ளது. அளவிலும் திறத்திலும் உலகமொழி இலக்கியங்கள் பலவற்றுடனும் ஒப்பிடத்கூடிய சிறப்பு இதனுக்கு உண்டு அதன் குறைகளுள் அது தாய்மொழியாயில்லாமல் தாய்மொழி வாழ்வைத் தடை செய்தே வளர்ந்தது என்பதும், இராமாயண பாரதபுராணங்களைப் புதுப்புது வடிவில் புதுப்பித்ததன்றித் தன்மயத்துவமும் புதுத்துறை வகுப்பும அற்றது என்பதுமே தலைமையானவை ஆகும். ஆயினும் மொழித் திட்டம, ஆழ்ந்த கருத்துக்கள், கவிதைப்பண்பு ஆகியவற்றிலும் இந்திய நாகரிகத்தின் முற்றிய வளர்ச்சியை நிழற்படம பிடித்துக்காட்டுவதிலும் அது ஒப்பற்ற மதிப்புடையது. மொத்தத்தில் தாய்மொழிகளிடையே தமிழ்மொழிகொண்ட இடத்தினைத் தாய்மொழியல்லாத வடமொழி வடநாட்டில் என்றுமே உடையதாயிருந்து வந்துள்ளது.

வருங்காலத்தில் வடமொழி இலக்கியம் புதிய வளர்ச்சி பெறும என்று கூறுவதரிது: ஆனல் அதன் பண்டையிலக்கியம் தமிழிலக்கியத்துடனென்றுபட்டு இந்தியாவின் நாகரிகச் சிறப்பைக் காட்டவும் இந்தியாவுக்கு வழிகாட்டவும் என்றும் உதவும என்பது உறுதி.

ஒருவரை ஒருவர் தேடி....!

நா. பாண்டுரங்கன்

நிலவொளியில் நின்று கொண்டிருந்த நீள்விழியாளைப் பார்த்தான் கண்ணன்! பூவையின் முகத்தில் புன்னகை. பயம், நாணம், பயம், இரக்கம் ஒன்றுமாறி ஒன்று—உணர்ச்சிகள் அவனிடம் கொந்தளிக்கத் தொடங்கி, சில கணங்கள் அவனைக் கல்லாக நிறுத்தி விட்டன. பயமே, இந்த உணர்ச்சிகளிலெல்லாம் தலை தூக்கி நின்றது. கடுங்காற்றின் கர்ஜனையும், பெருமழையின் பேரிரைச்சலும், மரங்களின் கிளைகள் முறிவதால் ஏற்படும் 'மடமட' ஒலியும், மாடுகன்றுகளின் ஓட்டமும், ஓயாத சத்தமும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் இருக்கும் போது, கருவானைக் கிழித்துக் கொண்டு கண்ணைப் பறிக்கும் மின்னல் ஏற்பட்டு, அந்த ஒளியால் மெழுகப்பட்ட வெளிக்காட்சிகளைக் கண்டால் ஏற்படும் விநாடி நேர மகிழ்வைப் போலவே, கண்ணனின் மனத்தில் கூத்தாடும் உணர்ச்சிகளை மீறியது திடீரென்று கிளம்பிய ஆனந்த மின்னல்! அந்த ஆனந்த மின்னல் மறைந்ததும், கூத்தாடிய உணர்ச்சிகள் மேலும் பயங்கரமாயின. கண்ணன் நின்றுகொண்டிருந்தவளின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். துடியிடையாளின் உதடுகள் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

'கண் உள்ளவர்கள் நிலவொளியில் தாஜ்மஹாலைக் காண வேண்டும்!' — எப்பொழுதோ படித்திருந்த சொற்றொடர் இப்பொழுது அவன் மனத்தில் சடுமெனத் தோன்றி, திடுமென மறைந்தது!!

கருகருவென்று வளர்ந்து, அடர்ந்த பளபளப்பான, அள்ளிச் சொருகி விடப்பட்ட அழகான கூந்தல்—குறுகிய நெற்றி—குறுகுறுவென்று பார்த்து இதயத்தைக் குடிக்கும் கண்கள்—எடுப்பான மூக்கு—பவளப் படிக்கட்டுக்கருகே முத்துச் சுவர்கள்—கருப்பு ஜாக்கெட்டைச் சிறிதே வெளியில் காட்டி உடலைச் சுற்றிக்கொண்டிருக்கும் மஞ்சள் நிற சில்க் புடவை — சியாமளா நிலவொளியில் நின்று கொண்டிருந்தாள், கண்ணனுக்கு அருகில்.

வானத்தில் நிலவு. வையகத்தில் அமைதி. மாடியில் கண்ணனுக்கு எதிரே சியாமளா!

"கரத்தின் அருகே ஆனந்தம்! அள்ளி அள்ளி உண்ணலாம்; ஆசை தீர உண்ணலாம். இந்த ஆனந்தத்தை — விரும்பினால், மறுத்தும் விடலாம. மறுத்தால், இழக்கவேண்டிய அந்த உணர்வே முடியும் மாபெரும் இன்பம் — பேரின்பம்? ஆனந்தம அழைக்கிறது — இது எப்போதும் நடப்பதல்ல—எல்லா இடத்தும் நடப்பதல்ல—எங்கேயோ ஓரிடத்தில் எப்படியோ நடக்கும் எதிர்பாராத ஆனால் ஆச்சரியமான நிகழச்சியாகும். ஆனந்தம் அழைக்கிறது. வா என்று கட்டியணைத்துக் கொள்வதா? போ என்று வெட்டி விடுவதா?

என்ன செய்வது?............... சியாமளா நண்பனின் தங்கை ......துரோகம்.....நண்பனுக்கா நயவஞ்சகம்? — கண்ணன் முடிவுக்கே வரமுடியவில்லை. சியாமளாவைப் பார்த்துக் கொண்டே இருந்தான். நெற்றியில் வியர்வை அரும்பியது. ஏதோசொல்ல ஆரம்பித்தான். சியாமளாவே அதற்குள் பேசத் தொடங்கினாள். "கண்ணன்..." என்று அவன் பெயரை உச்சரித்தாள், மெல்லிய குரலில். ஆனால் உறுதியாக அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை; வார்த்தை வரவில்லை.

"என்ன சியாமளா? என்ன? ஏன் இப்போது இங்கு வந்தாய்? என்ன வேண்டும்?......" கண்ணன் நடுங்கும் குரலில் கடகடவென்று கேட்டான். சியாமளாவிடமிருந்து அம்பு போல் பதில் வந்தது.

"என்ன வேண்டுமா?...... என்ன வேண்டும் எனக்கிப்போது என்று தெரியாதா உங்களுக்கு?"

"தெரியாது!!!"

"தெரியாதா? உங்கள் காதல் வேண்டும்எனக்கு இப்போது!"

"கண்டதும் காதலா?"

"பின் என்ன? காணாமலா காதல் ஏற்படும்?"

கண்ணன் திகைத்தான். சியாமளா வெற்றிப்புன்னகை புரிந்தாள். தொடர்ந்தாள்.

"பசிக்கு உணவு தருவது பாவமல்ல!"

"நண்பனுக்குத் துரோகம் செய்வது பாவமல்லவா?" — கண்ணன் சற்றுக் கடுமையை இழுத்து வைத்துக்கொண்டு கேட்டான். சியாமளா அதற்குப் புன்னகை ததும்பப் பதிலளித்தாள் — பளிச்சென்று "துரோகம் செய்தாலல்லவா, அது பாவமாகும்! துரோகம் செய்யச் சொல்லவில்லை உங்களை —காதல் செய்யச்சொல்லுகிறேன்"

"விதவைக்குக் காதலா..."

"அப்படி யென்றால்?"

"கல்யாணமான பிறகு ஏற்படுவது காதலா?"

"காதல் ஏற்படாமல் செய்து கொள்வது கல்யாணமா?"

"அப்படியென்றால் நீ இன்னும் கல்யாணமே செய்து கொள்ள வில்லையா?"

"நான், இனிமேல்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்"

"யாரை?"

"நான் காதல் புரிபவரை"

"அவர்......"

"வேறெங்குமல்ல--இங்கேயே இருக்கிறார்! வேறெவருமல்ல — என்னெதிரே நிற்பவர்தான்!" சியாமளாவின் வார்த்தைகளில் உறுதி கலந்திருந்தது. கண்ணன் இதைக் கேட்டதும் திகைத்தான். பிறகு சிரித்தான். அவள் சிரித்தாள். இருவர் சிரிப்பு மட்டுமல்ல, இதயமும் இணைந்தது. வானத்தில் நிலவை மூடவந்த கருமேகம் வேறுபக்கம் திரும்பிச் சென்று கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது.
....

2


நால்வாயின் கரையிலே, மரத்தடியில் தனியே உட்கார்ந்

3

திருந்தான் கண்ணன். விண்ணிலிருந்த நிலவு, மரக்கிளையினிடையே ஒளியைப் பொழிந்தது. கிளைகளில் இலைகளின் இடுக்குகள் வழியே பாய்ந்து தரையில் பரவிய ஒளி, கருப்புக்கம்பளத்தின் மேலே, வெள்ளைப் பூக்களை வாரியிறைத்திருப்பது போல இருந்தது. கால்வாயில், தண்ணீர் கரைபுரள ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்தான், அதன் அடியில் நிலவு இருந்தது. வானத்திலிருந்து கொண்டிருந்தால் தன்னுடைய சோகக் கதையைக் கேட்க முடியாது; காது கேட்காது. ஆதலால் தனக்கருகில், தண்ணீரில் இறங்கியிருக்கிறது, விண்ணிலிருந்து, நிலவு! இப்படி நினைத்தான் அவன். அவன் கண்களிலிருந்து கண்ணீர் துளித்துளியாகக் கிளம்பி அருவியாக ஓடிற்று. கண்ணீரைத் துடைக்கக் கருத்தும் கட்டளையிடவில்லை, கரமும் விரும்பவில்லை. அப்படி அவன் அழுவதிலே ஓர் ஆறுதலை உணர்ந்தான். அந்த அமைதியும் — தனிமையும் — அதை அவன் எண்ணவே முடியவில்லை. அருமையான பாட்டில் அபசுரம் விழுவதைப் போல, அந்த அமைதிப் பாட்டில் அபசுரம் வைத்தது, ஆந்தை ஒன்று அலறி! அது அவனுக்குப் பயங்கரத்தைத் திடீரென்று உண்டாக்கியது—அவன் சிந்தனை திரும்பியது—

●

"போடா வெளியே! போக்கிரிப் பயலே தராதரம் தெரியாதநாயே—இனி தலைவைச்சுப் படுக்காதே இந்த வீட்டுப் பக்கம். ஓடு! நின்னு, உடம்பை உரிச்சுடச் சொல்லுவேன்..." சியாமளாவின் தந்தை சதானந்தம் சீறும் சர்ப்பமாகக் காட்சியளிக்கிறார். சியாமளா தலையைக் கவிழ்த்துக் கொண்டு நிற்கிறாள்; மார்பு 'படபடவென்று' அடித்துக் கொள்கிறது. அப்பொழுதுதான், அங்கே வெளியிலிருந்து நுழைந்த, சியாமளாவின் அண்ணன், கண்ணனின் அருமை நண்பன், பார்த்திபன் அந்த அலங்கோல நிலையைக் காண்கிறான்; சிலையாகி நிற்கிறான். கண்ணன் நடுங்கும் கால்களுடன், கவிழ்ந்த தன் தலையை நிமிர்த்தி, பார்த்திபனின் முகத்தைப் பார்க்கிறான்—பரிதாபம் வேண்டுகிற அந்தப் பயங்கரமான முகம்!—விரைவாக நடந்து கண்ணன் பங்களாவை விட்டு வெளியேறுகிறான்.



"சிநேகிதனும் — சிநேகிதன்!...கண்ட காலிக் கழு

தையை வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுவந்தா, சண்டாளத்தனம் பண்ண ஆரம்பிக்கிது!! சிநேகிதனைப் பார் — சிநேகிதன் — சிரிக்கும் நரி!..." சதானந்தத்தின் கூக்குரல் வெளியேறும், கண்ணனின் காதைத் துளைக்கிறது. கால் பிடரியில்பட களத்திலிருந்து ஓடுபவனின் முதுகில் காற்றினும் கடு விரைவில் வந்து, அடுக்கடுக்காக அம்புகள் பாய்வதுபோல் இருக்கிறது, சதானந்தத்தின் அலறல்! கண்ணனின் நடைதள்ளாடியது. கண்கள் இருண்டன; வியர்வை கொட்டியது. அவன் நடந்து கொண்டே இருந்தான். உலகம் — உலகம்பூராவும் இருள். ஒளியே இல்லையே. வழியே தெரியவில்லையே. யாரிடம் பேசுவது? என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? — வாழ்வு — வாழ்க்கை முடிந்து விட்டதா என்ன? மரணத்திற்குப் பின் உள்ள பாதையில் பயங்கரமான சிந்தனைகள் படபடக்கும் மார்புடன் நடந்து கொண்டே இருந்தான 'ஹாரன்' சத்தம், இருமுறை அலறுவதுபோல் இருந்தது. கவிழ்ந்திருந்த தலையை நிமிர்த்தினான். நிமிர்த்தியதுதான் தாமதம், நடுப்பாதையிலிருந்து ஓரத்திற்கு ஓடினான்.

"காது செவிடாப்பா... காட்டெருமை கத்தறாப்போல, ஹாரனை அழுத்தி அழுத்திக் கத்துறேன்... நீபாட்டுக்கு நடுரோட்ல வாரியே — பிணமாயிருப்பே, நான் சடன்பிரேக் போடாட்டா... இப்படித்தான் தானா வந்து விழுந்து நம்ப தாலியை வாங்கறது..." டிரைவர் கோபமாகப் பேசினான். பஸ் நகர்ந்தது. கண்ணன் ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு நடந்து கொண்டே இருந்தான். "பிணமாயிருப்பே......" டிரைவரின் அந்த வார்த்தைகள் தான் அவன் மனத்தில் சுழன்றன. "பிணமாகியிருந்தால் என் இந்தப் பயங்கரமான நிலைக்கு விடுதலை கிடைத்திருக்கும்! பிணம் – மரணம் – மரணத்தை விடுதலை என்கிறார்களே அது அர்த்தமற்றதும் அல்லதான். மரணம் என்னைத் தழுவ வந்தது, நான் தப்பிவிட்டேன்—தப்பிவிட்டதால் தவறு செய்து விட்டேன்" என்னென்னவோ எண்ணங்கள் அவன் மனத்தில்! நடந்து கொண்டே இருந்தான் 'கண்ணா.........' யாரோ கூப்பிட்டார்கள். திடுக்கிட்டுத் திரும்பினான். அவன் பெயருள்ள யாரையோ, யாரோ கூப்பிட்டிருக்கிறார்கள். கண்ணன் நடந்தான். விட்டு விட்டு, பயம், வேதனை அவனைக்கொட்டிக் கொண்டிருந்தன! பங்களாவை விட்டு வெளியேறும் போது தன் நண்பன் பார்த்திபன் அவனைப்பார்த்த பார்வை ....அந்த முகம், கண்ணனின் மனத்தில், அவன் கண்ணுக்கெதிரே, நின்றது.

●

"கண்ணா! நீ என் கண்ணான நண்பனல்லவா? என்ன நடந்தது? ஏன், அப்பா இப்படி உன்னைக்கோபிக்கிறார் என்ன தவறு செய்தாய்?......"



" பார்த்திபா, தவறு செய்து விட்


டேன் நான், தவறு என்பதை உணர்ந்துகொண்டே தவறு செய்துவிட்டேன். தவிர்க்க முடியாத தவறு செய்துவிட்டேன். நண்பா பார்த்திபா! ஆறுதல் கூறும் நிலையில்நிற்கிருய் இப்போது நீ. தவறைச் சொன்னல் ஆர்ப்பரிப்பாய்! நண்பனக இருக்கிறேன் நான் இப்போது. தவறைச் சொன்னதும் நயவஞ்சகனுகி விடுவேன்! கலைமான் என்று தோட்டத்திலே உலவவிட்டேன்; அது காட்டுச் சிங்கமாகிக் கர்ஜிக்கிறதே என்று கலங்கிப் போவாய் நீ. நான் செய்தது தவறு அல்ல—குற்றம்!......குறைகள் உடையவன் நான் என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தேன்... குமுறுகிறேன்..."

"நண்பன் என்ருலே குறைகளைப் பொறுப்பவன் என்றுதானே பொருள்... நான் அந்தக் குறைகளைப் பொறுப்பேன் ...கூறு..."

"பார்த்திபா! நாம் இருவரும் நிலவு வீசிக்கொண்டிருந்த இரவிலே, உங்கள் பங்களாவின் வெளிமாடியில் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோமல்லவா?... அன்று இரவுதான், நான் குற்றம் செய்யத் தொடங்கிய இரவு... நாம் இருவரும் தான் மாடியில் அந்த அழகான திறந்த வெளியில்—படுத்திருந்தோம். மணி ஒன்றடித்தது! நீ எழுந்து, புகைவண்டி நிலையத்திற்கு இரண்டு மணி மெயிலில் வருகிற உன் மாமாவை அழைக்க, உன் தந்தையுடன் போய்விட்டாய். போகுமுன் என்னையும் அழைத்தாய், எனக்குத்தூக்கம் தூக்கமாகவந்தது.பாழும்தூக்கம்! அந்தத் தூக்கம் வந்திராவிட்டால் நான் உன்னுடன் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருப்பேன். என் வாழ்வில் இந்தப் புகை படிந்திராது. அந்த சந்தர்ப்பம் — சந்தர்ப்பத்திற்கு மனிதன் அடிமையாகி விடுகிருன் அல்லவா? நீ வெளியில போன இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் சியாமளா என்னெதிரே வந்து நின்ருள் — சியாமளா என்று எனக்கு இரண்டு நிமிஷங்களுக்குப் பின்தான தெரிந்தது. இரண்டொரு தடவை தான், நான் சியாமளாவை உங்கள் வீட்டில் நன்ருக நான் பார்த்திருக்கிறேன் — திடுக்கிட்டு எழுந்தேன். கண்ணைக் கசக்கிக்கொண்டு மீண்டும் மீண்டும் பார்த்தேன்.சந்தேகம் தெளிந்தது. எதிரே நின்றது பெண்தான் — சியாமளாதான் —விதவை உன் தங்கைதான!

"பயந்து நின்று கொண்டிருந்தேன் நான. பயப்படாமல் நின்று கொண்டிருந்தாள் சியாமளா. நான் நடுங்கினேன். சியாமளா சிரித்தாள். என் சித்தம் சிதைந்தது! அப்போது, நண்பா, உன் உருவம் என எதிரே நின்று பேசிற்று.

(அடுத்தஇதழில் முடியும்)



மூன்றாம் அத்தியாயம்

வியாபார வேடம்

ஸூராஜ்—உத் தௌலா நின்றுகொண்டிருந்தான். அவன் பக்கத்தில் அவனது உயிருக்குயிரான தோழன் முடின்கான் ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தான்.

"வெள்ளையர்களுக்குச் சுழி சரியில்லை போலும். மேலும், மேலும் நம்மிடமே மோதுகிறார்கள். மலையைக் கண்டு மண்மேடென்று கருதுகிறார்கள். மடையர்கள்"

"ஆத்திரப் படாதீர்கள்! கிடைத்த செய்தி கெடுமதியாளர்கள் கிளப்பிவிட்ட பொய் வதந்தியாகவும் இருக்கலாம்"

"முடீன், நம் ஒற்றர்களின் திறமையில் குற்றங் காண்கிறாய்!"

"அப்படியில்லை. அர்த்தமற்ற ஆத்திரங்கூடாது. அதுவும் ஆத்திரத்தில் அறிவிழந்து அவசரத்தை மணந்துகொள்ளலாமா?"

"உன் ஊர்மிளா சொன்னாளே, அவளது அப்பன் சொன்னதாக! அதுவும் பொய்யா?"

"என்ன.........!!"

"பின் ஏன் இன்னமும் கிஷோனிதாஸ் தலைநகர் வரவில்லை? கொலைக்குக் காரணமானவர்களே கிஷோனிதாசையும் கெடுத்து அழைத்துக்கொண்டு போயிருப்பார்களல்லவா?"

"வெள்ளையர்களுக்குப் பரிந்து பேசும் துரோகியல்ல நான். ஆனால் கிஷோனிதாஸ் வராமல் போவாரா? வருவார். வெள்ளையர்களின் போக்கின் காரணந்தான் புரியவில்லை. கொலை செய்யத் துணிந்தவர்கள் கொள்ளையிட்டிருக்கலாம் நகரையே — செய்யவில்லை! கிஷோனிதாஸ் கொண்டு வருவது அற்ப சொத்து. இதற்காகவா நாவைக் குழைப்பர்? இருக்காது. இதில் ஏதோ சூதிருக்கிறது. அதுவும் துரோகம் சேர்ந்து விளையாடுகிறது"

"என் மனம் அமைதியடையவில்லை. காரணம் எதுவானாலும் சரியே, அந்தக் கெடுமதி படைத்த குண்டர்களை யடக்க வேண்டும், அவர்களின் வால்களை ஒட்ட நறுக்கவேண்டும்"

"கல்கத்தாவில் கிஷோனிதாஸை நிறுத்தி வைத்திருப்பதில் ஏதோ அர்த்தமிருக்கிறது. அந்த மர்மந்தான் தெரியவில்லை. ஏனெனில் அவர் அப்படித் தவறும் தறுதலைத்தனம் படைத்தவரல்லவே?"

"மர்மம் என்ன, என்னை ஒழிக்கச் சதி"

"மன்னிக்கவேண்டும், துரோகியாகத் துணிவது மிகக் கடினம்"

"ஆம், ஆனால் துணையிருக்கையிலல்ல, தனித்து! ஏதோ சூழ்ச்சி நடக்கிறது. இது மட்டும் உண்மை."

"அற்பர்கள் கூடிப் பேசுவதால் இமயம் நடுங்கலாமா?"

"உளி அளவில் சிறியது. ஆயிரம் உளிகள் சேர்ந்தால் இமயம் இடியவேண்டியது தானே!"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒரு வேலைக்காரன் வந்தான். ஒரு கடிதத்தை நீட்டிவிட்டுத் திரும்பிவிட்டான். ஸுராஜ் அதைப் பிரித்துப் படித்தான். அவன் கண்கள் அகல விரிந்தன. அவன் முகத்தில் வானவில்லில் பல வர்ணங்கள் தோன்றுவதுபோல பலப் உணர்ச்சிகள் தோன்றின. ஆனால் அவை. ஓடும் வண்டிச் சக்கரத்தின் இடைக்கால்கள் மாறி மாறி மேலுங்கீழும் செல்வதுபோலச் சென்றன. முடின்கானுக்கு ஒன்றும்விளங்கவில்லை. அவன் அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறதென்பதை யறிந்து கொள்ள ஆவலால் துடித்தான். அது என்னவென்று கேட்க அவன் எண்ணினன் என்பதை அவனது துடிக்கும் உதடுகள் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

"பார்த்தாயா, நான் சொன்னது நடந்துவிட்டது" என்ருன் ஸுராஜ். அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. அவன் குரல் கூடச் சற்று கனத்தது.

"என்ன நடந்துவிட்டது?"—ஆச்சரியத்தோடு கேட்டான் முடின். அப்பொழுது அவன் வீசியெறிந்த கடிதம் ஒரு மூலையில் கிடந்தது. காற்று அதனைப் படிக்க முயன்று கொண்டிருந்தது!

என்ன கடிதம்?— கல்கத்தாவிலிருந்து வந்திருந்தது அமீனசந்த் எழுதியிருந்தான்.

......கிஷோனிதாஸ் ஒப்பந்தம் பேசிக்கொண்டிருக்கிருன் வெள்ளையரிடம்! அவனைச் சுபேதாராக்க அவர்கள் உறுதிகூறியுள்ளார்கள். அதற்குக் கைமாருக வரியோ, காணிக்கையோ கேட்கக்கூடாதாம்......

......இந்தக் காரணங்களால் தான் கிஷோனிதாஸின் போக்குமாறிவிட்டது. இளம்பும்போது இந்தக் கேடுகெட்ட புத்தியில்லை. இடையிலே ஏற்பட்ட கோளாறு! அதுவும் முன்கூட்டியே வெள்ளையர்களால் யோசித்துத் திட்டமிட்ட சூழ்ச்சி......

......தாங்கள் வெத்துவேட்டாம். விஷயமில்லாமல் துள்ளுகிறீர்களாம். இன்னும் ஒரு வாரத்தில் தங்கள் தலை உருளப் போகிறதாம். படையெடுக்கப் போகிருர்களாம் அந்தப் பண்பற்ற பரங்கிகள்—நெருப்புடன் விளையாடப் பார்க்கின்றன விட்டில் பூச்சிகள்......

......போருக்கு இழுக்க, தங்கள் ஆளை வழிமறித்துவிட்டார்களாம் அந்த 'வக்ரகங்கள்'......

அமீன் சந்த்தின் இரசமான உரையாடல்—பக்குவம் மிக்க பேச்சு ஒலித்துக்கொண்டிருந்தது இருவர் உள்ளங்களிலும்! தங்கள் பிரஜை, உண்மையுள்ள ஊழியன், காருண்ய மிக்க சர்க்கார்..........என்று வார்த்தைகள் மிகப் பணிவாகத்தானிருந்தன எழுதியது யார்? அமீன் சந்த்! யாருக்கு? தனது சொந்த மகளே. அதுவும் அப்பன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே......ஸுராஜ் தனக்குள்ளாகவே வருந்தினன். அவன் கண்கள் கலங்கின. அமீன்சந்த்தின் உண்மையான இராச விசுவாசத்தைக் கண்டு அவன் மிகவும் இரங்கினன். முடீன்கான் சிந்தித்தான், சிரிப்பை வீசினன்!

"இதற்குத் தக்க திட்டம் வேண்டும். சிரிப்புத் தருமா சிறப்பான வழியை"

"மன்னிக்கவேண்டும். அமீன் சந்த் ஒரு சாதாரணக் கப்பல் வியாபாரி. அவனுக்கு ஏன் இவ்வளவு தொல்லைகளும் துயரங்களும்............இராச பக்தி அளவிற்கு மீறுகிறது என்று நினைத்தேன. சிரிப்புத் தானக வந்துவிட்டது"

"முடீன், உன் எண்ணம் குறையுடையது. நான் அனுப்பினேன. ஆபத்தை யுணர்த்தியவனையே சந்தேகிக்கிருய், இது தவறு!"

"அமீன்சந்த் ஒரு நுழை நரி-அவ்வளவுதான்"

டெல்லியில் பாதுஷா காட்டிய கடிதம்தான் அமீன்சந்த்தின் உள்ளுருவத்தை ஓரளவு உணர்த்தியது முடீனுக்கு! அதிலிருந்து அவன் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்தான். பாதுஷாவின் கட்டளைப் படியே அவனது போக்கை இரகசியமாக நோக்கி வந்தான். சரியானபிடி கிடைக்கும் வரையில் சுபேதாரிடம் அமீன்சந்த்தைப்பற்றி எதுவுங் கூறுவதில்லை என்று முடிவு கட்டியிருந்தான். ஆனல் வாய்ப்பு நேருகிறபொழுதெல்லாம் அவன் ஒரு சூழ்ச்சிச் சிலை



யென்பதைக் குத்திக்காட்டிக் கொண்டுவந்தான்.

"முடீன், அது கிடக்கட்டும். இப்பொழுது என்ன செய்வது?"

"தவருன கூட்டுறவைத் தடுக்கவேண்டும்"

"தடி கொண்டா?"

"ஆமாம், ஆனல் முதலில் வழக்கம்போல் வார்த்தையில்......"

"சரி, சரி, கேட்போம்"

"கிஷோனிதாஸ் உடனே வெளியேற்றப்பட வேண்டும். கல்கத்தா தலைவருக்கு சுபேதார் கட்டளை"

"ஆனல் இதை அனுப்புவது......" சுபேதார் நெற்றியைத் தடவினன். இங்கும் அங்கும் நடந்துகொண்டே இருந்தான். திடுக்கிட்டுத் திரும்பினன்.

"முடீன், நீயே போ"

"நானு ஏன், எப்படி?"

....

"இந்துவியாபாரியைப் போல வேடமிட்டுக்கொள், கடிதத்தைக்கொண்டு போ. நேராக அல்ல, அமீன்சந்த் மூலமாகவே! ஏனெனில் உன்னல் அப்பொழுதுதான் அமீன்சந்த்தைப் புரிந்துகொள்ளமுடியும்"

"உத்தரவு"

"முடீன் உள்ளே சென்றுன். ஸுராஜ் மீண்டும் நடந்துகொண்டிருந்தான்.

......அமீன்சந்த் உண்மையில் எழுதியிருப்பானு? இருக்காது!

அவனது ஜென்ம வைரி நான் — ஒருவகையிலல்ல, பல வகைகளிலும்...மகளைக் கெடுத்தது சொந்த விஷயம். ஆனல் அவன் முஸ்லீம் அல்லாதவன். மத வெறுப்புக் கூடவா மறைந்துவிடும்! குமரன் என்று கூறவுங் கூசுங்குடிகள் நம் நாட்டில் வாழ்கிருர்கள். ஏன் இவன் அப்படி இருக்கக் கூடாது?

சூழ்ச்சிக் குழுவில் இவனும் ஒருவேளை அங்கம் வகிக்கலாம். பின்னர் வியாபாரிகளுக்கு அரசியலில் நுழையவேண்டிய அவசியம் என்ன? முடீன் எப்பொழுதும் வருமுன் கூறும் வல்லமை யுள்ளவன். அவனும் சந்தேகிக்கிருனே!

அதோ அமீன்சந்த்- அவன் முகத்தில் களங்கமில்லை. அவனது இயல்பான சிரிப்பு, சற்றுக் கோரந்தான்! அது அவனது பிறவியின் குறைபாடு... இப்படி யெண்ணி யெண்ணிப் பொழுது கழிந்துகொண்டிருந்தது.

இப்பொழுது ஒரு தாடிக்கார ஆசாமி உள்ளே நுழைந்தான்.

"வணக்கம்"

"ஹா, ஹா, ஹா......" அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

"முடீன், வியாபார வேடம் வெகு பொருத்தம். நீ வாள்

எடுக்கவேண்டாம். வண்டி வண்டியாகப் புளுகக் கற்றுக் கொள். பெரிய கோடீஸ்வரனாகிவிடுவாய். வாணிபத்திற்கு அதுதானே முதல், மூலதனம்'' முடீன் விடைபெற்றுக்கொண்டு சென்றான். அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி—ஏன் அமீன்சந்தின் நடவடிக்கைகளை நெருங்கிக் கவனிக்க வாய்ப்புக் கிடைத்ததை எண்ணித்தான்! அவன் சென்ற திக்கைப் பார்த்துக் கொண்டே நின்றான் ஸுராஜ் நீண்ட நேரம்—பிறகு ஒருபெருமூச்செறிந்தான்.

நான்காம் அத்தியாயம்

எச்சரிக்கை

குதிரையில் சென்றுகொண்டிருந்த முடீன் அங்குள்ள குளக்கரையைப் பார்த்தான். ஊர்மிளா அந்திப்பொழுதைக் கழிக்க அங்கு அமர்ந்திருந்தாள். உடனே குதிரையை விட்டுக் கீழிறங்கி அவளிருக்குமிடம் சேர்ந்தான்.

''அம்மா......''

''என்ன வேண்டும்?''

''முத்தம்...''

''என்ன...''—சீற்றக்குரல்.

''கல்கத்தாவுக்கு இங்கிருந்து...''

''என்ன உளறுகிறாய்!''

''மொத்தம் எத்தனை மைல்கள்?''

ஊர்மிளா அவனை உற்று நோக்கினாள். அவன் குரல் அவளுக்குப் பழக்கமானதாகவே தோன்றியது.

''நீ யார்?''

''நான் ஒரு வியாபாரி''

''பெயர்...''

''கான்!''

முடீன் சிரித்தான். ஊர்மிளா சிந்தித்தாள்.

''ஊர்மிளா, என்னைத்தெரியவில்லையா?''

அவள் ஆனந்தத்திலாழ்ந்தாள். தன் உயிர்க் காதலன இப்பொழுதுதான் முதன் முதல் அவளிருப்பிடம் நாடி வந்திருக்கிறான். ஆகவே அவனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் செல்ல எண்ணினாள். ஆனால் அவன் வந்த காரியம் முடியும் வரை எந்தச் சொந்தச்செயலையும் செய்ய முடியாதுஎன்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். திரும்பி வரும்பொழுது அவசியம் தங்க வேண்டும் என்று மன்றாடினாள். அவனும் அவளது அன்பழைப்பை ஏற்றுக் கொண்டான்.

''காதலா, இந்த வணிக வேடம் ஏனோ?''

''அரசியல் பித்தலாட்டம், அதைப்பற்றி நீ ஏன் கவலைப் படுகிறாய்?''


''சொல்லாவிட்டால் போங்களேன்!''

''உன் தந்தை இப்பொழுது எங்கிருப்பார்?''

''பணிமனையில்!''

அவன் குதிரையேறினான். அவள் வழிகூட்டியனுப்பினாள்.

அமீன்சந்த் அவனை வரவேற்றான் சாதாரண முறையில்! அவனுக்கே அவன் யாரென்று தெரியாது. வியாபாரி வேடத்தில் வீரன் முடீன் மறைந்திருக்கிறான் என்ற



உண்மையை அவன் அறியவில்லை. வந்தவன் சுபேதார் கட்டளையைக் காட்டினான். மேலும் விளக்கமாகச் சொன்னான். அமீன்சந்த் முகத்தில் களிப்பு கூத்தாடிற்று. தனது நெடுநாள் ஆசை இதோ நிறைவேறப் போகிறது......சுபேதாரின் விருப்பத்தை இந்த அரசியல் ஞானி எடுத்துக் கூறுவான். ஏற்கனவே ஏற்றிவைத்துள்ள போதையால் எதிர்த்தே பேசுவர் வெள்ளையர். பிறகு ஆத்திரம் அணை கடக்கும். அப்புறம் போர், போர், போரே!... அமீன்சந்த் எண்ணத்திரையில் படம் நிழலாடிற்று! அவன் வந்தவனை வெள்ளையர் கூடாரத்திற்கு அழைத்துச் சென்றான்.

டிரேக், தனது தனியறையில் புகைத்துக்கொண்டே பணிமனைக் கட்டுகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது இருவரும் நுழைந்தனர். இருக்கைதந்து உபசரித்தான். வழக்கம்போலச் சிரித்துக்கொண்டே அமீன் சந்த் அவனை அறிமுகம்செய்துவிட்டு நழுவினான். பிறகு முடீனும், டிரேக்கும் பேசிக்கொண்டிருந்தனர் நெடுநேரம்.

"சுபேதார் என்னை அனுப்பினார்"

"காரணம் என்னவோ?"

"டாக்காவிலிருந்து வந்த கிஷோனிதாஸை மடக்கியதின் காரணம் அறிய......"

"அப்புறம்......"

"அவனை உடனே விட்டுவிட வேண்டும், கல்கத்தாவில் அவனை அரைக்கணமும் வைத்திருக்கக்கூடாது"

டிரேக் சிந்தித்தான். பிறகு அமைதியைக் கிழித்துக் கொண்டு பேசினான்.

"மன்னிக்கவேண்டும். அந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியாது!"

"முடியாதா...சரி, உங்கள் கோட்டை புதுப்பிப்பு வேலை உடனே நிறுத்தப்படவேண்டும்"

"கோட்டையைப் பலப்படுத்துகிறோம், சந்திரநாகூர் பிரஞ்சுக்காரருக்காக. சுபேதார் அஞ்சத் தேவையில்லை"

"சுபேதாரின் கட்டளையை மீறுவது தவறு. ஆபத்தை விலைபேசி வாங்குகிறீர்...எச்சரிக்கை செய்கிறேன்"

"தூதரே, உம் வேலை முடிந்தது. இனி வீண்வார்த்தைகளை வீசி வேதனையை வரவழைத்துக்கொள்ளாதீர்"

"சரி, உம் விடையை எழுதிக்கொடும்—"

"முடியாது"

முடின்கான் முகம் சிவந்தது வெறிச் சிரிப்பு வீசித் தனது மீசையைத் தொட்டுத் தடவினான். ஒட்டுமீசைதானே அது ...ஆத்திர மிகுதியால் தன் நினைவிழந்து பலமாகத் தடவவே அது நழுவி விட்டது. கீழே விழுமுன் அதனைச் சட்டென்று பிடித்து பழயபடியே ஒட்டவைத்தான். இது கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்த இரகசியக் கதை...... அதையுங் கண்டுவிட்டான் அந்தத் தந்திரபரம்பரையைச் சேர்ந்த டிரேக்......இருப்பினும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை! [தொடரும்]

பாரதிதாசன் பரம்பரை

எச்சரிக்கை!

எல்லையில்லா இன்பத்தைக் குவித்து வைத்தே
எடுத்துண்ணச் செல்லுகின்ற ஏழைமுன்னே
'இல்லையிதில் உனக்குரிமை செல்க' என்றே
இருகையால் தடைசெய்யும் செல்வர்பேச்சு,
நல்லுலகில் ஏழைமக்கள் வாழ்வுவேண்டி
நட்த்துகின்ற புரட்சிக்கு வகுத்தபாதை!
தொல்லையினைப் போக்குதற்கே ஏழைவாழ்வில்
தும்முகின்ற துயரொலி புரட்சிவேட்டாம்!

இரத்தத்தைக் கண்ணீராய்ப் பெருக்கிவிட்டே
ஏழையழும் குமுறலொலி குடிசைகேட்கும்!
உரத்தகுரல் கேட்டிருக்கும் மாடிவிட்டில்
உல்லாச் திலைப்ற்றி இருக்கும்பேச்சு!
உளுத்திருக்கும் சமுதாய அடிப்படையில்
உயர்ந்துவிட்ட கலைக்கூடம் ஏழைமூச்சு
முழக்கத்தால்மட மடென மண்ணில்சாயும்
வையமிதைப் புரட்சியென்று வாழ்த்துக்கூறும்!

சரித்திரத்தின் முதலேடு சமயப்போர்!
சதிவிளக்கும் அரசியற்போர் அடுத்தபக்கம்!
பொறிக்கின்றார் பொன்னேட்டில் புதுநிகழ்ச்சி
மறத்தமிழர் அறப்போராம் வாழ்வுப்போரால்
சிரித்தாடும் பகைக்குன்றம் செய்துவைத்த
பொய்க்கதைகள் தீயிடுதல் சிறுநிகழ்ச்சி,
குறிக்கின்ற புதுவாழ்வுக் கின்பம் ஊற்றி
வரும்புதுமைப் பெரும்புரட்சிக் கெச்சரிக்கை!

குழித்தலையை அடுத்த கடம்பர்கோவிலைச் சார்ந்தவர் தோழர் ஞா. மாணிக்கவாசகன். புரட்சி வேகத்தில் கவிதையின் ஒவ்வொரு வரியும் எக்காளமிடக் காணலாம்.

—ஆசிரியர்.





16 சினத்தீ

முற்பகல் செய்த தீவினைக்குப் பிற்பகல் இரையாவான் என்பதற்கொரு எடுத்துக்காட்டாய் முடிந்த பாண்டியன் அதற்கொரு இலக்கியமாகவும் ஆகிவிட்டான்.

மன்னன் உயிரிழந்தான். மதுரை யாதாயிற்று? இனி அதைத்தான் இளங்கோ நமக்குக் கூறுகிறார்.

பாண்டியன் முன்னிலையிலே சோழநாடாண்ட செங்கோல் மன்னர்களின் நீதியை நெறியை எடுத்துக்கூறி இடித்துரைத்த கண்ணகி புகார் நகர மகளிர் எழுவரின் கற்பறம் நிகழ்த்திய செயலைக் கூறுகிறாள். 'இத்தகைய மகளிர் பிறந்த பூம்புகார் நகரிலே யானும் பிறந்தேன். அதுவும் உண்மையாகி, யான் கற்பரசி என்பதும் மெய்யானால் மன்னனோடு, மதுரையையும் அழிப்பேன்' எனப்பெருந்தேவி உயிர் பிரிந்ததையும் அறியாது கண்ணகி பேசி நீங்கினாள்.

மதுரைநகர மகளிர்களையும், ஆடவர்களையும், மற்றவர்களையும் நோக்கி "யான் கூறுவதனைக் கேளுங்கள். என்னருமைக் காதலனைக் கொன்றதன் காரணமாக, மதுரையையும் அழிப்பேன். யானோ குற்றமற்றவள்" என்றுகூறினாள்.

நான்மாடக் கூடல்
  மகளிரும் மைந்தரும்,
வானக் கடவுளரும்,
  மாதவரும், கேட்டீமின்
யானமர் காதலன்
  தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன்,
  குற்றமிலேன்யான் என்(று)

அக்கணமே சூழ்ந்து சூழ்ந்து பற்றி எழுந்தது தீ. பரவிப் படர்ந்தது செந் தீ. புகைமண்டி, அனல் கொழுந்துவிட்டு ஊழித்தீயோ என்று கூறும்படி தாவிப்பற்றியது. பாண்டியன் நெடுஞ்செழியன் தன் அநீதியால் வளைந்துபோன செங்கோலைத் தன் உயிர் கொடுத்து நிமிர்த்ததையும், தன்னுயிர் விட்டு, அரசமாதேவி கணவனுயிர் தேடிப் பிரிந்ததையும், அறியாது, சித்திரப் பாவைபோல ஆசான், கணித ஆசிரியன், அரசிறை அதிகாரி, மந்திரக் கணக்கர், அரண்மனை மக்கள் ஆகியோர் அசைவற்றிருந்தனர். அப்பொழுது தேர்வீரரும், யானை வீரரும், குதிரை வீரரும், காலாட்படையினரும், தீ அணைக்க விரைந்தனர்.

பூச்சூடி, சந்தனம் பூசி, அணிபுனைந்து, ஆடை அழகுகாட்ட பள்ளியறையிருந்த மைத்தடங்கண்ணியரும், மைந்தரும், உச்சியில் முடித்த பூக்கள் சிந்த மார்பில் அணிந்த மாலை குலையப்புலவி இன்பந் துறந்து அலங்கோலமாய் அஞ்சிக்கலங்கினர்.

சாந்தம் தோய்ந்த
ஏந்திள வனமுலை
மைத்தடங் கண்ணார்
மைந்தர் தம்முடன்
செப்புவா யவிழ்ந்த
தேம்பொதி நறுவிரை
நறுமலர் அவிழ்ந்த
நாறிரு முச்சித்
துறுமலர் பிணையல்
செறிந்த பூந்துகள்
குங்குமம் எழுதிய
கொங்கை மூன்றில்
பைங்காழ் ஆரம்
பரிந்தனர் பரந்த
தூமென் சேக்கைத்
துளிப்பதம் பாராக்
காமக் கள்ளாட்டு
அடங்கினர்.

கள்ளைப் போலக் களிப்பாவதை எண்ணி ஆசிரியர் காமத்தை இங்கே சுட்டுகிறார். மகப்பெறாத மக்கள் இங்ஙனம், இன்பத்தை இழந்து துன்பத்தைக் கண்டனர்.

பட்டு விரித்த பஞ்சணையில் துயின்ற குதலைச் செவ்வாய் தவழ்நகைப் பிள்ளைகளை எழுப்பி எடுத்துக்கொண்டு, செவிலிப் பெண்டிரோடு அஞ்சி நடுங்கி ஓடினர். வந்த விருந்தினரை வரவேற்று உபசரித்து இல்லறம் வளர்க்கும், மங்கைமார், கணவனை இழந்து மன்னனை வென்று, மதுரையை எரித்த செயலை நேர்மை என்றும், நீதி என்றும் பலப்பல சொல்லினர்.

திதலை அல்குல்
தேங்கமழ் குழலியர்
குதலைச் செவ்வாய்க்
குறுநடைப் புதல்வரோடு

பஞ்சியார், அமளியில்,
துஞ்சு துயில்எடுப்பி,
வால்நரைக் கூந்தல்
மகளி ரொடுபோத
வருவிருந் தோம்பி
மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர்
பெருமகிழ்வு எய்தி
இலங்குபூண் மார்பில்
கணவனை இழந்து
சிலம்பின் வென்ற
சேயிழை நங்கை

இங்ஙனம், பூமணத்தோடு புதுமணம் துய்க்கும், ஆடவரும் மகளிரும், மகப்பெற்ற மங்கையர்களும், இல்லறம் வழுவாது காக்கும் பெண்டிருமிருந்த இயல்பைக் கூறிய இளங்கோ இனி நாடக மகளிர் அடைந்த கவலையை எடுத்துக் காட்டுகிறார்.

அரிய கலைகளாய் விரிந்த அறுபத்து நான்கினையும், கற்றுத் தெளிந்த கணிகையர் வாழும் இல்லங்களிலே முழங்கிய தண்ணுமை, எழுந்த முழவம், மெல்லிய தீங்குழல், இசைத்த யாழ் இவையெல்லாம் ஒலி அடங்கி எடுப்பாரற்று ஒருபால் கிடந்தன. நடனம் புரியும் நங்கைமார், ஆடரங்கு இழந்து ஓடி நின்று 'இந் நாட்டிற்குப் புதிதாக வந்து, கொண்ட கணவனை இழந்து, செங்கோலைத் தவற விட்ட மன்னனைத் தன் சிலம்பினால் வென்று இவ்வூரைத் தீயிட்ட இந்த வீர பத்தினி எந்நாட்டினளோ? யார் மகளோ?' என்று வியப்படைந்து வினவினர்.

எண்ணான்கு இரட்டி
இருங்கலை பயின்ற
பண்ணியல் மடந்தையர்
பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவம்
தாழ்தரு தீங்குழல்,
பண்ணுங்கிளை பயிரும்
பண்ணியாழ்ப் பாணியொடு
நாடக மடந்தையர்
ஆடரங் கிழந்தாங்கு
எந்நாட்டாள் கொல்
யார் மகள்கொல்லோ
இந்நாட்டு இவ்வூர்,
இறைவனை இழந்து
தேரா மன்னனைச்
சிலம்பின் வென்றிவ்
வூர் தீயூட்டிய
ஒருமகள் என்ன

கற்புடைப் பெண்டிர்களாலும், கணிகையராலும் மற்றவர்களாலும், கண்ணகி மாசற்றவள் என்றும், அவள் செயல் நேர்மையானதே என்றும் கூற வைத்த இளங்கோ அடிகள் மதுரை நகர் அடைந்த சோகத்தையும் கூறுகிறார்.

மதுரை நகரில் வழக்கமாய் நிகழும், அந்தி விழாக்கள் நின்றன. தீ வேட்டலும், தெய்வம் பரவலும் நின்றன. மனைகளிலும், மாடங்களிலும், விளக்கவிந்து விட்டன. முரசு முழக்கமும் இல்லை. மன்னன் இழைத்த தீங்கிலே மதுரை நகரம் பாழ்பட்டது. இத்தகைய மதுரையிலே

காதலற் கெடுத்த
நோயொடு உளங்கனன்று
ஊதுலைக் குருகின்
உயிர்த்தனள் உயிர்த்து
மறுகிடை மறுகும்
கவலையில் கவலும்
இயக்கலும் இயங்கும்.
மயங்கலும் மயங்கும்

கண்ணகி கணவனைக் காணாத துன்பத்தோடு உளம் கொதித்து உலைபோல் பெருமூச்சுவிட்டு மணிமாட வீதிகளிலே சுற்றித் திரிந்தாள். சிறிய தெருக்களில் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டாள். நடந்து வருவாள். மயங்கி நிற்பாள். அப்படி நிற்குமொரு சமயத்திலே நெருப்பின் வெம்மையைப் பொறுது அஞ்சி மயங்கி மதுராபதி என்னும் தெய்வம் கண்ணகிக்குப் பின்னே வந்து நின்றது.

கண்ணகி முன்னே நிற்கவும், மதுரைத் தெய்வம் பின்னே நிற்கவும், அமைந்த காட்சியில், வீரக் கற்பரசியின் பின்னே தெய்வம் அஞ்சி நடுங்கி நிற்கிறதைக்காண வைக்கிறார் ஆசிரியர்.

"நங்கையே, என் குறையினைக் கேட்பாயாக" என்ற ஒலி கேட்டுக் கண்ணகி முகந்திருப்பினாள். 'யார்' எனக் கேட்டு 'என் துன்பம் அறிவாயோ?' என வினவினாள்.

ஆர்அஞர் எவ்வம்
அறிந்தேன் அணியிழாஅய்
மாபெருங் கூடல்
மதுராபதி என்பேன்
கட்டுரை யாட்டியேன்
யானின் கணவற்குப்
பட்ட கவற்சியேன்
பைந்தொடி கேட்டி

வினவிய கண்ணகிக்கு மதுரைத் தெய்வம், 'உன்னுடைய பொறுத்தற்கரிய பெருந் துன்பத்தை யான் அறிந்தேன். அதற்காக வருந்துகிறேன். யானோ இம் மதுரை நகரத்தே உள்ளேன். மதுராபதி என்பது என் பெயராகும். பாண்டியன் செயலிலே பிறந்த அநீதியும், அதனால் கோவலன் கொலைப்பட்டதும், ஊழ்வினைப் பயனே ஆகும். இம் மதுரையில் பறையோசை கேட்டதேயல்லாமல் மணியோசை கேட்டதில்லை. பகைவரால் பாண்டியன் பழிதூற்றப்பட்டானே அல்லாமல் குடிகளால் பழிசுமத்தப் பட்டதில்லை. அழகிய நெற்றியினையுடைய மயிலினமாதராய் இளமை என்கிற யானை, கல்வியாகிய பாகனுக்கும் கட்டுப்படாமல் ஓடிய சமயத்திலும், பாண்டியர் பழங்குடி ஒழுக்கத்திலிருந்து தவறியதில்லை.'

சோழநாட்டின் நீதிமன்னர்களைக் கண்ணகி கூறியதற்கொப்பாக, பாண்டிய நாட்டின் பழங்குடி மன்னரின், கொற்றமும் வெற்றியும், மதுராபதியால் கூறப்படுகின்றன. பொற்கைப்பாண்டியனது வரலாறுபோன்ற சிலவற்றைக் கூறுகிறாள்.

“இன்றுதொட்டுப் பதினான்காவதுநாள் கழிந்தபிறகு நீ உன் கணவனை வானவர் வடிவில் கண்டு கூடுவாய்” என்று கூறி மதுரைத் தெய்வம் மறைந்தது.

கண்ணகி துர்க்கைகோயிலுக்கு வந்தாள். வாயிலில் தன் கை வளையல்களைத் தகர்த்தெறிந்தாள்.

கருத்துறு கணவன்
கண்டபின் அல்லது
இருத்தலு மில்லேன்
நிற்றலு மிலனே,


கண்ணகிக் கடுஞ்சபதமொன்று எடுத்துக்கொள்ளுகிறாள். கணவனை காணும் வரையிலும், உட்காருவதுமில்லை, ஓய்ந்து நிற்பதுமில்லை என்று கூறுகிறாள். எனவே கணவனைக்காணுமவரையிலும் நடந்து சினம் தணியாது திரிகிறாள். மதுரையின் மேற்கு வாசல் வழியாக மதுரையைவிட்டு அகலுகிறாள். அப்பொழுது:

கீழ்த்திசை வாயில்
கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில்
வறியேன் பெயர்க

என்று கூறுகிறாள். மதுரையின் கிழக்கு வாசல் வழியாகக் கைப்பிடித்த கணவனோடு புகுந்த கண்ணகி, மேற்கு வாசல் வழியே, கணவனை இழந்து, வறியவளாய்ச் செல்வதை அவள் வாய்விட்டுச் சொல்லும்போது நம் உள்ளத்திலும் அந்தச் சோகம், பலமாக வந்துவருத்துகிறது. அவலம் ததும்புகிறது.

இரவென்றும், பகலென்றும், பள்ளமென்றும், மேடு என்றும் பாராமல் கால்போன போக்கிலே வைகைக் கரை வழியே வழிகடந்து நெடுவேள் குன்றம் என்னும் திருச்செங்கோட்டுமலை மீது ஏறினாள் கண்ணகி. ●

4



வழுக்கைமண்டைக்காரர்: சார் சார் கொஞ்சம் ரேடியோவை நிறுத்துங்க. பக்கத்திலே எங்கேயோ இடி இடித்துப் புயல் காற்று அடிக்கிறது போலிருக்கு

கிராப்காரர்: ஹிஷ்...ஹிஷ்...ஹி...ஹி இடியுமில்லை மின்னலுமில்லை சார். நம்ம சுப்புக்குட்டி பாகவதர் பாடறார். கோடையிடி கோதண்டராமன் மிருதங்கம், மதுரை மாரியப்பா வயலின். அதைத்தான் இப்பொழுது வைத்துக் கொண்டிருக்கிறேன்.

படிவிச் சாமி!

க. குஞ்சிதம்

வைரவியாபாரி பரமசிவம் பிள்ளைக்கும் பார்வதி அம்மாளுக்கும் நல்ல நாளில் மணம் நடந்தது. சோதிடசிகாமணி சோமு சாஸ்திரி தான், கிரகங்களின் பொருத்தம் பார்த்து சுபயோக சுபதினத்தில் எல்லாச் சடங்குகளையும் குறைவின்றி நடத்தினர். தட்சிணை தாம்பூலாதிகளிலும் குறைவில்லை. ஆயினும் ஏனோ கல்யாணமாகி 15 ஆண்டு சென்றும் ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லை!

பரமசிவமும், பார்வதியும், செய்யாத பூசை இல்லை. எல்லாப் புண்ய ஸ்தலங்களுக்கும் யாத்திரை போய் வந்தனர். குருக்கள் யோசனைப்படி அபிஷேக ஆராதனைகள், ஆரியர்கள் மனங்குளிரத் தான தருமங்கள் செய்தனர். பார்வதியும் எத்தனையோ குட்டித் தேவதைகளை வேண்டிக்கொண்டாள். தனக்குப் பேய் பிடித்திருக்குமோ என்ற மூட நம்பிக்கையால் பேய் ஓட்டியந்திரமும் கட்டிக்கொண்டாள். கடைசியாகச் சிநேகிதிகளின் யோசனைப்படி ஆபரேஷனும் செய்து கொண்டாள். அப்புறமும் குழந்தை பிறக்கவில்லை.

இருபது ஆண்டுக்குப் பிறகு குருக்களின் சொற்படி பிரார்த்தனை வைத்துக் கொண்டதன் பலனே, ஆபரேஷன் மருந்தின் பயனே ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

பரமசிவம் பிள்ளைக்கு ஆண் குழந்தையாகப் பிறந்ததில் அளவுக்கு மீறின மகிழ்ச்சி. அதனல் கோயில் குருக்களுக்குச் சுக்கிர தசையடித்தது. குருக்களின் கைப்பாவையானர் பரமசிவம் பிள்ளை, குழந்தைக்கு மாகையேந்திரன் எனப் பெயரிட்டனர். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, செல்லமாக, பட்டை பட்டையாகச் சாம்பல் பூசியும், ரத்தின ஆபரணம் பூட்டியும் கோயிலுக்கு நாள் தவருமல் சென்றும் வளர்ந்து வந்தான்.

ஃ ஃ ஃ

மாகையேந்திரனுக்கு வயது வந்ததும பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அவனும் பள்ளியில் அக்கரையோடு படித்துத் தேர்ச்சி பெற்று வந்தான். அப்போது அவனுக்கு வயது 12. ஆயினும் எந்தக் காரியத்தையும், ஆராய்ந்து தான் ஒத்துக் கொள்வான். அறிவுக்குத்தக்க கேள்விகள் கேட்பான். சரியான பதில் சொன்னல்தான் ஒத்துக்கொள்வான். அவன் ஒரு அறிவுக் குஞ்சு!

ஒருநாள் பரமசிவம் பிள்ளை பூசையறையைப் பூட்ட மறந்து விட்டு வெளியில் சென்றவர் பாதி வழியில் நினைவு வரவே வீட்டுக்குத் திரும்பி வந்தார். பூசை அறைக்குள் மாகையேந்திரன் சிவலிங்கத்தின் மேல் தேங்காய் உடைப்பதைக் கண்டார். உடல் நடுக்கமெடுக்க,

"அபசாரம், அபசாரம், அடப் பாவிப் பயலே, எவ்வளவு அகங்காரமடா உனக்கு, சுவாமி தலைமேலேயா தேங்காய் உடைக்கிருய்?" என்று கத்திக் கொண்டே தேங்காயைப் பிடுங்கி எறிந்தார்.

மாகையேந்திரன் இந்த அதட்டலுக்கு அஞ்சாமல், "எதுக்காகப்பா எம்மேலே அவ்வளவு கோபம்? அம்மா மிளகாய் பொடி அறைக்கும குழவியைப் போலத்தானே இருக்கு இதுவும். அந்தக் கல் மேல் தேங்காய் உடைச்சா அம்மா கோவிக்கமாட்டாளே; நீ எனனடாண்ணு, கல்லைப் போய் சாமிகேமின்னு பொய் சொல்றியே. இதுக்கு நமமாதிரீ உயிர் இருந்தா இன்னேரம் அழுவனுமே, இதோ பார் நான் உதைதத்தாக்கூடக் கல்லாட்டமா பேசாம இருக்கிறதே. உனக்குக் கொஞ்சமும புத்தியில்லேப்பா, பயித்தியம்" என்று துடுக்காகப் பேசினன். வேறு எவராவது இது மாதிரி கேட்டிருந்தால், பிள்ளை அவர்கள் ஒரே அடியாக அடித்துக் கொன்றிருப்பார். மகனையும் அடிக்கச் சென்ருர். அதற்குள் தவமாய்த் தவமிருந்து கால் வீங்க நடந்து, சிறுவனைப்பெற்ற தாய் அறையினுள் நடந்த சந்தடியறிந்து ஓடிவந்தாள். கணவன் இருக்கும் கோபநிலையறிந்து, மகனின் வாயை அடக்கிக் கூட்டிக்கொண்டு வெளியே சென்ருள்.

அந்தச் சமயத்தில் பரமசிவம் பிள்ளையைப் பார்க்கக் குருக்கள் வந்தார். அவர் இருப்பதைப் பார்த்து "என்ன பிள்ளை அவர்களே! என்ன கோபம்? இதென்ன சிவலிங்கத்தின் தலைமேல் தேங்காய் உடைத்த சின்னங்கள்?"

"குருக்களே எல்லாம் என் தவபபுதல்வன் செய்யும் குரும்புதான். எத்தனையோ தலைமுறையாக இருந்த லிங்கத்தின் மேல் தேங்காய் உடைத்து விட்டான். என்ன கெட்ட காலமோ! தெரியாத்தனம் என்று நினைத்தால் லிங்கத்தை உதைத்துக் கொண்டே என்னிடம் துடுக்காகக்கேள்வி கேட்கிருன். காதால் கேட்கவே என் மனம் சங்கடப்படுகிற" தென்ருர். "அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டாறு பையன்? எல்லாம் பள்ளிக்கூடத்திலே ஒரு ஆதித் திராவிட வாத்தியார் இருக்கான். அவன் திராவிடர்கழகத்தைச் சேர்ந்தவனும அவன் வேலை தான். இதெல்லாம்,சொல்லிக்கொடுத்திருப்பான். சர்க்கார்லே இந்த ஈனப் பயல்களுக்கெல்லாம் வேலை கொடுத்துத்தான் குழந்தைகள் இப்படி அலங்கோலம் செய்யறதுகள். நல்ல ஜாதிக்காரனுக்கெல்லாம படித்து விட்டு வேலையில்லாமே இருக்கிருர்கள். என மைத்துனன் ஒருத்தன் கூட வேலையில்லாமே இருக்கான். எனன செய்யறது அவரவர் தலைவிதி" என்று பேச்சை முடித்தார் குருக்கள்.

பிறகு வந்த காரியத்தைக் கூறினர் "நீங்ககூடக் கேள்விப் பட்டிருப்பீர்கள். நம்ப ஊருக்கு ஒரு சுவாமிகள் வந்திருக்கார். அவர், ஆகாரங்கள் ஒனறுமே உணபதில்லை, மலங்கழிப்பதுமில்லை. எல்லாம் ஈசன் திருவிளையாடல், கடவுள் அவதாரமேதான். தினம் காலை எட்டு மணியிலிருந்து, ஒரு மணி வரை

சிவபெருமானுக்குப் போலவே அபிஷேகம் நடத்துகிறார்கள். அவரைத் தரிசித்துக் கொண்டே இருக்கிறார்கள். எல்லோருக்கும் விபூதி கொடுத்துக்கொண்டே அமர்ந்திருக்கிறார். அவர் முன் ஒரு உண்டியல் இருக்கிறது. அதில் அவரவர் சக்திக்குத் தக்கவாறு, ரூபாய்களைப் போடுகிறார்கள். அபிஷேகம் முடிந்ததும் தனியறையில் சுவாமி நிஷ்டையில் நான்கு மணிவரை இருப்பார். பிறகு சாயந்திர பூசை எட்டு மணிவரையில் நடக்கும். தனியறையில் பூசைக்கு வேண்டிய சாமான்களோடு அவரவர்களுக்கு இஷ்டமான பலகாரங்களையும் படைத்தால், ஈஸ்வரனே நேரில் வந்து சாப்பிடுகிறாராம். இப்படி அபிஷேகம செய்துவைக்க விரும்பி, யாராவது உங்களைப்போன்றவர்கள் அழைத்தால் போகிறார். இல்லாவிடில் தனிமையாக ஒரு மரத்தடியில் உட்கார்ந்து விடுகிறார். அவர் கொடுக்கும் வரமெல்லாம் அப்படியே பலித்து விடுகிறது. அவரைத் தரிசிக்கக்கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும்'' என்று அளந்தார் ஒரு அளப்பு.

''பெரிய மகான் போலிருக்கிறது. நாளைக்கு நம் வீட்டிற்கு அழைத்து வந்து அபிஷேகம் செய்து வைக்கவேண்டும். வாருங்கள் நாம இப்பொழுதே சென்று அவரைப்பார்த்து வரலாம்'' என்று புறப்பட்டார் பக்தர் பரமசிவம். மனைவியைக் கூப்பிட்டு எல்லாச் சங்கதிகளையும் கூறி நாளைக்கு வேண்டியதைச் செய்யச் சொல்லிவிட்டு, மகனையும் கூட்டிக் கொண்டுபோனார் மனிதச்சாமி இருக்குமிடம்.

மாகையேந்திரனுக்கு இந்தச் செய்தியும் பக்தகோடிகள் நடந்துகொள்வதும் ஆச்சரியமாக இருந்தது. எப்படியும் நாளைக்குச் சுவாமி நம் வீட்டிற்கு வந்த பிறகு உண்ணாமல் உயிர் வாழும், வண்டவாளத்தை ஆராய்ந்தறிய ஆவலுடன் இருந்தான். வெளியூரிலிருந்த நண்பன் பூங்காவனத்திற்கு, ஊரில் வந்திருக்கும் சுவாமியைப் பற்றிய உண்மையை அறிய உடனே வரவும் என்று ஒரு கடிதம் போட்டான்.

⁂ ⁂ ⁂

மறு நாள் அதிகாலையிலிருந்தே அவர்கள் வீடு வருவோரும்,போவோரும் கூட்டமாகவே இருந்தது. அவன் எதிலும் கலந்து கொள்ளவில்லை. சுவாமியைக் கும்பிடச்சொன்ன தந்தையின் சொல்லை மறுத்ததினால், என்றும் அடித்திராத தந்தைகூட அவனை அடித்துவிட்டார். கண்டிப்பாகக் கும்பிட மறுத்துத் தனியாகச் சென்று சுவாமியின் அந்தரங்கத்தை எவ்விதம் அறிவதென்று சிந்தித்துக் கொண்டிருந்தான மாகையேந்திரன்.

பகல் ஒரு மணிவரை அபிஷேகம் நடந்தது. சுவாமிகள் தனியறையில் நிஷ்டையில் அமர்ந்திருந்தார். வேறு அறைகள் பூசைக்குச் சரியில்லை என்று கஜானா அறையில் தங்கினார்.

மெத்தை வீடானதால் உயரமான கண்ணாடி ஜன்னல்கள் இருந்தன. மெத்தையில் மேல்படியருகில் சிறு தானிய அறைப் பக்கத்தில் ஒரு கண்ணாடி ஜன்னல் இருந்தது. அது ஒன்றுதான் மூட முடியாமல்

திறந்திருந்தது. அதன் வழியாக மாகையேந்திரன் அறைக்குள் நடப்பதைக்கவனித்தான்.

என்ன ஆச்சரியம்! ஜடை முடி தரித்த சுவாமி ஜடை முடி இன்றிக் குருக்களின் மைத்துனராக இருந்தார். குருக்களும் அவரும ஆனந்தமாக மதுபானம் அருந்தி படைத்திருந்த பண்டங்களை வெகு சுவாரஸ்யமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நண்பன் இந்தக் காட்சிகளைக் காண இன்னும் வரவில்லையே என்று வருந்திக் கொண்டே கவனித்து வந்தான் மாகையேந்திரன். "சுவாமிகளே! எப்படி என்யோசனை. நீ படித்துப் பட்டம் பெற்று என்ன பிரயோஜனம்? எனக்கிருக்கும் புத்தி உனக்கில்லையே, சிரமமில்லாத தொழில் எப்படி ஆனந்தமாக இருக்கிறது பார்த்ீரா?" என்ருர் குருக்கள்.

"நல்ல தொழில்தான் ஆனால் ஜடை முடிகளை ஒட்ட வைத்துக்கொண்டு இந்தப் பாவிகள் என் தலைமேலே, தேனையும், பாலையும், வீணாக ஊற்றும்போது தான், சிரமம், பிசுபிசுப்பு! மைத்துனரே! நீர் கல்லைக்கழுவிக் கடவுளென்று நம்பவைத்துப் பிழைப்பதை விட என்னையே கழுவிப் பிழைப்பது நிரம்ப கௌரவமான தொழில்தான்! இப்படியே தினம் ஒரு வீடாக அழைக்க வேண்டுமே" என்ருன் அவன்.

"பூ! இவ்வளவுதானு? அதற்கும் ஒரு வழி சொல்கிறேன். நம் பக்தகோடிகளை எல்லாம் ஏமாற்றுவது சுலபம். அந்த சு. ம. கூட்டத்தார்கள் தான் நம் ஊழல்களை அறிந்து கேள்வி கேட்பார்கள் 'அவர்களைத்தான் ஏய்க்க முடியாது. இவர்களெல்லாம் நாம் சொல்வதை நம்பிச் சொர்க்கத்திற்கு வழி தேடுபவர்கள் தானே" எனருர் குருக்கள்.

"சரி இப்போ என்ன செய்வது? சொல்லுங்கள்" என்ருன் அவன். "இதோ இதுதான் பணப் பெட்டியின்சாவி. நம்மை நமபி இருக்கும், இந்தப் பரமசிவம் பிள்ளையிடமிருந்து ஏமாந்த சமயம் பார்த்து எடுத்துவிட்டேன். நீ இங்கு வந்ததே பெரும் பாக்கியமென்றெண்ணி இன்னமும் சாவியைக் கவனிக்கவில்லை. இன்னும் இரண்டுமணி அவகாசம் தான். பிறகு அந்த மடையர்கள் உன்னைப் பார்க்கவருவார்கள். இந்தா சாவி. பெட்டிகளைத் திற" என்று துரிதப்படுத்தினர் குருக்கள்.

பிறகு இருவரும் பெட்டிகளை எல்லாம் திறந்து, இருந்த வைரநகைகள்,ரூபாய்கள், விலை உயர்ந்த வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்து, பிரசாதம் வைத்திருப்பதாகச் சொன்ன பெட்டியில் வைத்து மூடினர்கள். பிறகு சூழ்ச்சியிலே சுகப்படும், தேவதூதர்கள் இத்தனை நேரம் தாங்கள் செய்ததை யாராவது கவனித்துவிட்டார்களோ என்று சுற்றுமுற்றும் பார்த்தனர், உயரே இருந்த கண்ணடி ஜன்னல் வழியே சிறிய உருவம் ஒன்று தங்களைக் கவனிப்பதுபோல் தெரிந்தது. குருக்கள் திடுக்கிட்டார், ஒரு வாயில் விரல் வைத்து ஏதோ சப்தமிட்டார்!

மாகையேந்திரன் அறையினுள் நடப்பதை ஜன்னல் வழியே பார்த்ததும் தந்தையைக் கூப்பிட எண்ணினுன்:

ஆனால் தந்தையோ சாயந்திர பூஜைக்கு அதிகமாக சாமான் வாங்குவதற்கு ஆளுடன் போயிருந்தார். அம்மாவும் சிநேகிதிகளைக் கூட்டிவரச் சென்றிருந்தாள். வீட்டில்வேறு யாரும் இல்லை. அவன அறைக்குள் போகவும் அனுமதியில்லை. என்ன செய்வான். இரவு கொள்ளையிட வந்தால் கூச்சலிட்டு எல்லோரையும் எழுப்பலாம், பகல்கொள்ளையடிப்போரைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கவேண்டும். இது தான் தர்மம்!

குருக்களின் சப்தம் கேட்டான் ஒரு கொலைபாதகன். அவனே குருக்களின் மருமாள். சதிகாரன், எல்லோரையும் தந்திரமாக வெளியே அனுப்பினவன். குறிப்பறிந்து மாகையேந்திரனின் பின்புறம் சந்தடியின்றி வந்து அவன் வாயில் துணிப்பந்தை வைத்து அடைத்தான். ஜன்னல் வழியே சுவாமிகளின் அறையினுள் தள்ளிவிட்டான்!


குருக்களும் சுவாமிகளும் பையனால் தங்கள் குட்டு வெளியாகுமென்று அஞ்சினார்கள். பதைத்தார்கள் எனவே மாகையேந்திரனை பெட்டியினுள் போட்டுப் பூட்டிவிட்டார்கள். பிறகு சுவாமிகளை நிஷ்டையிலிருப்பதுபோல் நடிக்கச் செய்துவிட்டு யாருமறியாமல் வந்தது போலவே வெளியே போய்விட்டார் குருக்கள்.

கொஞ்ச நேரம் கழித்துக் குருக்கள் களைப்புடன் வருபவர்போல் வந்தார். பரமசிவம் பிள்ளை "சுவாமிகளே உங்களை வீடெல்லாம் போய்த் தேடினோம் காணவில்லையே! எங்கே போயிருந்தீர்" எனக்கேட்டார்.

"ஒரு அவசர காரியமாகப் பக்கத்து கிராமத்திற்குப் போயிருந்தேன். சாயங்கால பூசை நினைவு வந்தது. உடனே வெய்யிலையும் பார்க்காமல் ஓடிவந்தேன்" என்றார்.

"சரி வாருங்கள். சுவாமிகளை எழுப்பிச் சாயந்திர பூசையை ஆரம்பிக்கலாம்" என்று கூட்டிக்கொண்டு சென்றார்.

சாயங்கால பூசை முடிந்து சாப்பிடும்பொழுது கூட மகனைத் தேடவில்லை பரமசிவம்!



சுவாமிகள் வருகையால் அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி. பார்வதியும் மகனைக் கவனிக்கவில்லை. எல்லோரும் உணவருந்திவிட்டு அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும பொழுதுதான், மகனை அடித்ததும் பிறகு அவனைக் காணுததும் நினைவுக்குவந்தது. எல்லா இடங்களிலும் தேடினுர்கள்.

எங்கும்கிடைக்கவில்லை. பார்வதி அழுது தவித்தாள்.

அன்று கடையில் நடைபெற்ற வியாபாரப் பணத்தைப் பெட்டியில் வைக்கப் பரமசிவம் பெட்டியைத் திறந்தார்:

அந்தோ அவர் கண்டது என்ன? பெட்டிச் செல்வங்கள் அனைத்தும் இழந்து சவப் பெட்டியாகி, தன் புதல்வன் குற்றுயிராகிக் கிடப்பதைப் பார்த்தார். "ஐயோ குடிகெட்டதே" என்று அலறினுர். சப்தம் கேட்டு வெளியிலிருந்தோர் ஓடி வந்தனர். மாகையேந்திரனைக் கீழே யெடுத்துப்படுக்க வைத்தனர். "தம்பீ, தம்பீ" என்று அழைத்தார் பரமசிவம், சிறிது கண் திறந்து "குருக்களும, சுவாமி வேஷத்தில் அவர் மைத்துனனும், செய்த சதி...தா...ன்...அ...ப்...பா..." என்ற குறைவாக்கியத்தோடு, அவன் ஆவி பிரிந்தது. உண்மையைச் சிறிது அறிந்தார் பரமசிவம் "ஐயோ என் செல்வனே! இவ்வளவு அறிவுள்ள உன் தந்தையா நான்? நானொரு மடையன், சூழ்நிலையறியாமல் மனிதப் பிண்டமாக, சுய அறிவுத் தன்மை யற்றவனுக வாழ்ந்தேனே! என் கண்ணே! எனக்கு அறிவுச்சுடர்கொளுத்தினுய். பகுத்தறிவற்றுப் பழமையிலே மூழ்கிப் பாழடைந்தேனே! இன்றோடு என் அறியாமை மடியட்டும். அன்பே நீ இருந்து மகிழ்விக்காமல் மறைந்தாயோ, ஊரை ஏமாற்றிப் பிழைக்கும், வீணன் அந்தக் குருக்கள், சதிகாரர்களின் காலில் விழச் சொல்லி உன்னை அடித்தேனே, என் செல்வனே உன்னை என்று காண்பேன்? திருட்டுப் பயல் குருக்களையும் அவன் மைத்துனனையும் பிடித்து இழுத்து வாருங்கள்?" என்று கதறிக்கொண்டே ஆளனுப்பினுர்; பரமசிவம் பிள்ளை.



மாகையேந்திரனின் கடிதம் கிடைத்த உடனே புறப்பட்ட நண்பன் பூங்காவனம், சில அசந்தர்ப்பத்தால் அப்பொழுதுதான் வந்தான். தன் சிநேகிதன் இறந்து கிடப்பதைப் பார்த்துக் கலங்கி நின்ருன். பரமசிவம் பிள்ளைக்குப் பூங்காவனத்தைக் கண்டாலே பிடிக்காது. அவனிடம் பேசவும் மாட்டார். அன்று அவரே அவ்விடம், நடந்தவைகளைச் சொன்ஞர். எல்லாவற்றையும் அறிந்த பூங்காவனம் "குருக்கள் செய்த வேலைதான்" என்ருன். உடனே போலீஸ்டேஷனுக்கு விரைந்தான் போலீசை அழைத்துவர.

பரமசிவம் பிள்ளையிடம் எவ்வளவோ ஏமாற்றிக் கொள்ளையடித்துத் தின்று, கொழுத்த தன் சரீரத்தைத் தூக்கமாட்டாமல், தூக்கிக் கொண்டு, அசைந்தசைந்து, வந்தார் குருக்கள். பரமசிவம்பிள்ளை "குருக்களே! எங்கே உன் பட்டினிச் சாமி? என்மகனைக் கொன்று, என் செல்வங்களையும், கொள்ளையடிக்க உதவிய உன் கூட்டாளி எங்கே? டேய்! நீயும் உன் மைத்துனனும் செய்த மோசடி அறியாமல் முடங்கிக் கிடந்தேனே, வேஷம் போட்டு மோசம் செய்யக் கூட்டிவந்த உன் மைத்துனனை எங்கே விட்டு வந்தாய்? நயவஞ்சகப் பேயே! உண்மையைச் சொல்கிருயா இல்லையா?" எனக் கோபமாகக் கேட்டார். குருக்கள் "என்ன பிள்ளை அவர்களே! சிவ! சிவ! நான் கொலைகாரனு? என்மேல் வீணுகப்பழி சுமத்தாதீர் யார் செய்த வேலையோ எல்லாம் ஈசன செயல். உம் மகன் கடவுளுக்கு என்ன குற்றம் செய்தானே" அவரே அவனுக்குத் தண்டனை கொடுத்திருக்கிருர், எல்லாம் அவரவர் விதிப்பயன் நாமென்ன செய்யமுடியும்? என் மைத்துனன் ஊரிலல்லவோ இருக்கிருன். சுவாமிகள் அப்பொழுதே வேறு ஊருக்குச் சென்று விட்டாரே, அவரை மரியாதையின்றிப் பேசாதீர், அதனுல் ஏற்படும் பாபம் கொஞ்சமல்ல, இனிமேல் நீங்கள் எல்லாம் வல்ல கருணை மூர்த்தியை தியானித்து மனத்திற்கு ஆறுதல் பெற வேண்டியதுதான்! உம் என்ன செய்வது?" என்று பசப்பினர்.

"போதும் வாயை மூடு, உன் சாகசத்தை நிறுத்து. இப்படி நீ எத்தனை குடும்பத்தை அழிக்கத் திட்டமிட்டாயோ. என் அருமைச் செல்வன் உண்மையே அறிந்தான். எனக்கும் உங்களின் ஊரை ஏமாற்றிப்பிழைக்கும் கயமைத் தனத்தைஉணர்த்தினன்?' என்ருர். பரமசிவம் அதற்குள் பூங்காவனம் போலீஸ் ஜவான்களுடன் வந்தான், குருக்களைப் போலீசார் கைது செய்தனர். குருக்களின் வீட்டிலே இருந்த அவர் மைத்துனனையும் பிடித்தனர்.

கடவுள் அவதாரக் கயவனும், கோயில் குருக்களும் நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டனர். பரமசிவம்பிள்ளை பதறிய வண்ணம் யாவும் கூறினர். மாகையேந்திரன் எழுதிய கடிதம் காட்டிச் சாட்சி கூறினன் இளைஞன் பூங்காவனம். கூடியிருந்தோர் கண்கள் கலங்கின. பட்டினிச்சாமியின் குட்டு வெளிப்பட்டது. கொலைகாரர்கள் தண்டிக்கப்பட்டனர்.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN